ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

ட மலர் 49 | சுக்கில ஆண்டு மார்கழித்திங்கள் 10–1–90 | இதழ் 2

வைத்தீசுவரன்கோயில் தைச் செவ்வாய்த் திருவிழா



அருள்மிகு செல்வமுத்துக்குமாரப் பெருமான்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

பெறுவானும் பேறுநான்
 பெம்மானுள் ளுண்டேல்
அறிவாயோ வாநந்த
 மன்றி—யறிவேனுன்
ஆனந்தங் காட்டி
 யகத்திருப்ப னுகிலநு
மானந்தான் கண்டறியாய் மற்று.

— முத்திநிச்சயம் 6

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10–1–90 | இதழ் 2

உட்பொருள்

எண் பக்கம்

1 இந்துமத வளர்ச்சிக்கு விழித்தெழுவீர் ! ... 57
2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 62
3 "அபூர்வ கிரஹ நிலை" ... 68
4 ஸ்ரீ காமதகனமூர்த்தி ... 71
5 திருமுறைகளைப் போற்றுவோம் ... 73
6 எது தவம் ? ... 79
7 கடிதங்கள் 82, 89
8 மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ... 83
9 பார்வையாளர் குறிப்பு (நகல்) 86, 104
10 போதமும் சித்தியும் ... 87
11 காரியார், நெடுமாறர் ... 90
12 செய்திகள் ... 96
13 எதிர்காலம் ...100
14 இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-10 ...105

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 2

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில – மார்கழி – 10—1—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல் ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே

— திருஞானசம்பந்தர்.

இந்துமத வளர்ச்சிக்கு விழித்தெழுவீர்!

அவசியமும் அவசரமும் :

வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்ட காலத்தில் தோற்றங் கொண்ட தொல்பெருஞ்சமயம் சைவம். சிந்துவெளி நாகரிகத்தின் புதையுண்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ் வாய்வுகள் சிவவழிபாட்டின் தொன்மையைக் கி. மு. மூவாயிரத் திற்கும் முற்பட்டதாகநிறுவுகின்றன. சைவத்தைமுதன்மையாகக் கொண்ட இந்து மதத்திற்குப் பின்னால் தோன்றிய மதங்கள் இன்று உலகளாவிய செல்வாக்கினைப் பெற்று வளர்ந்துள்ளன. அவற்றைப் பின்பற்றுவோர் தொகையும் மிகுந்துள்ளன. ஆனால், நமது தொல்பெருஞ்சமயம், இதைப் பின்பற்றுவோர் இதன் உண்மையையும், உயர்வையும், நன்மையையும் உணராததன்

காரணமாகவும், அரசினரும் அந்நோக்கிலேயே போய்க்கொண்டிருப்பதன் காரணமாகவும், பெரிதும் வளர்ச்சி குன்றித் தளர்ந்து வருகிறது. நம்மவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துரைக்கவும், அரசினரின் ஒருதலைப் பட்சமான போக்கினை எடுத்துக் காட்டவும், இந்துமத மக்களை, தாய்ச்சமய வளர்ச்சியில் ஈடுபாட்டுடன் செயல்பட முன் வருமாறு அழைப்பு விடுக்கவும் வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளதை ஞானசம்பந்தம் கடமை உணர்வோடு சுட்டி அறிவிக்கின்றது.

இந்துக்கள் மூன்றும் இடத்தில் :

உலக மக்கள் தொகையில் இன்று இந்துக்களின் எண்ணிக்கை மூன்றுவது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிறித்தவ சமயம் இன்று உலகெங்கும் பரவியுள்ளது. கிறித்தவத்தின் இருபெரும் பிரிவுகளாகிய கத்தோலிக் மற்றும் பிராட்டஸ்டண்ட் பிரிவுகளைப் பின்பற்றும் மக்கள் தொகையைக் கூட்டினால் உலகில் மூன்றில் ஒரு பங்கு மக்களால் பின்பற்றப்படும் மதமாக, முதலிடத்தைக் கிறித்தவம் வகிக்கிறது. ஏறத்தாழ எழுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தோன்றிய இஸ்லாமிய சமயத்தை உலகெங்கும் இன்று பின்பற்றுவோர் தொகை எண்பது கோடி. உலக மக்கள் தொகையில் இஸ்லாமியர்கள் ஆறில்ஒருபங்காகத் திகழ்கிறார்கள். நமது பாரதநாட்டு மக்கள் தொகையில் இந்துக்கள் எண்பத்து மூன்றுசதவிகிதத்தினர். இஸ்லாமியர் பதினொரு சதவிகித்தினர். கிறித்தவர்கள் மூன்று சதவிகிதத்தினர். ஏனைய பலமதத்தினரும் மூன்று சதவிகிதத்தினர் என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

முன்னேற்றம் தடைப்பட மூன்று காரணங்கள் !

தொல்பெரும் சமயத்தைச் சார்ந்தவர்களாகிய இந்துக்கள், தொல்பெரும் நாகரிகத்திற்கும் கலாசாரத்திற்கும் சொந்தக்காரர்களாகிய இந்துக்கள், உலகெங்கும் பரவி வாழ்ந்திருந்தும், நாளும் எண்ணிக்கையில் குறைந்து வருவதற்குக் காரணங்கள் யாவை? ஒன்று; பக்தி மிக்கவர்களாக இந்துக்கள் வாழ்ந்தாலும், சமய தத்துவ உண்மையும், அதன் பயனும் உணராமையால் சமயத்தில் ஊற்றமும், சமய வளர்ச்சியில் போதிய நாட்டமும் இந்துக்களால் மேற்கொள்ளப் பெறவில்லை. இரண்டு; இந்த மதத்தினர் பல்வேறு காரணங்களுக்காகப் பிற மதங்களில் கூட்டங் கூட்டமாகச் சென்று சேர்ந்தமைக்கு உரிய காரணங்களை

ஆராய்ந்து அதனைக் கட்டுப்படுத்தப் பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. மூன்று: கடந்த இருநூற்றைம்பது ஆண்டுக் கால ஆட்சியாளர்கள் தெரிந்தும், தெரியாமலும் இந்துமத வளர்ச்சிக்குத் தடையாகவே செயல்பட்டுள்ளனர். இன்றுவரை மேற்குறித்த குறைகளைக் களைவதற்கான, உண்மையான – அறிவார்ந்த–இயக்க பூர்வமான முயற்சிகள் - எத்தரப்பிலிருந்தும் மேற்கொள்ளப் பெறுமை, பெரிதும் ஆபத்தானது என்பதை எச்சரிக்க விரும்புகின்றோம்.

பத்தி உண்டு; பற்றுறுதி உண்டா ? :

ஒரு சமயத்தின் வளர்ச்சி, அச்சமயத்தைப் பின்பற்றும் தனி மனிதர்களின் பற்றுறுதி; சமய இயக்கங்கள் மற்றும் நிறுவனங்களின் நெறிய வழிகாட்டல்; அரசு மற்றும் ஆட்சியாளர்களின் ஆதரவு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைய முடியும். இந்து மதத்தில் தனிமனிதர்கள் பக்தி மிக்கவர்களே அன்றிப் பற்றுறுதியோடு சமயம் காக்கும் நாட்டமோ ஆற்றலோ அவர்களுக்குப் பெரும்பாலும் இல்லை. சமயத்திற்கோ, சமயப் பண்பாடுகளுக்கோ, சமய நிறுவனங்களுக்கோ தாழ்ச்சியோ அன்றி அவமதிப்போ வருகிறபோது, இந்து மக்கள் கொதித்தெழுவதோ, குரல்கொடுப்பதோ, தட்டிக் கேட்பதோ இல்லை. வாழ்க்கையிலும் சமயம் சார்ந்த நெறிமுறைகளை நடை, உடை, பாவனைகளில் மேற்கொண்டு ஒழுகுவதும் இல்லை. சமய வளர்ச்சிக்காகத் தங்கள்வருவாய் மற்றும் செல்வத்தில் ஒருசிறுபகுதியையும் மனம் உவந்து தாமே வழங்க முன் வருவதும் இல்லை. உழைப்புச் செல்வத்தைக்கூட நல்குவதில்லை. இந்த மெத்தனப் போக்கை முதன்முதலில் இந்துப் பெருமக்கள் உதறித்தள்ளிவிட்டு, உண்மை உணர்ந்து உற்சாகத்துடனும், ஈடுபாட்டுடனும் இந்து சமயம் காக்க விழித்தெழுந்தாக வேண்டும்.

காரணங்களைக் கண்டறிய வேண்டாவா ?

யார் போனால் என்ன? யார் வந்தால் என்ன? என்ற போக்கை உடனடியாக நாம் கைவிட்டாக வேண்டும். இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழப் பதினைந்து விழுக்காட்டினர் அதாவது பன்னிரண்டுகோடிமக்கள் பிறசமயங்களில் உள்ளனர். இவர்களில் தொண்ணூறு விழுக்காட்டினர் இந்து சமயத்திலிருந்து மதம் மாறிப் பிரிந்துசென்றவர்கள் தாம். இவை ஏறத்தாழ ஒருஐந்நூறு ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பு. தன் விருப்பத்தோடு ஒரு மதத்திற்குச் சென்று சேர்பவர்களை விட்டுவிடலாம். வேறு காரணங்களால் ஏற்படும் இழப்புக்களை நாம் விரைந்து கட்டுப்படுத்த

முன்வராவிடின் காலப்போக்கில் இந்துமதம்மேலும் நலிவடையும் என்பதை இந்துக்கள் உணர்ந்து செயல்படவேண்டும்.

ஐந்நூறு ஆண்டுகளில் அசைந்தது; தேய்ந்தது :

கடந்த ஐந்நூறுஆண்டுகளில் வரலாற்றுக் கண்ணோட்டத்தில், முதலில் இஸ்லாமியர்களும், அடுத்துக் கிறித்தவ மதத்தினராகிய ஆங்கிலேயர்களும் ஆட்சிபுரிந்த காலத்தில் இந்துமதம்வலிகுறைய லாயிற்று. இவ்விழப்புக்கள் விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்தப் படவேண்டுபவை. ஆங்கிலேயர் ஆட்சியில், விக்டோரியா மகாராணியார் காலத்தில், இந்துமதக் கோயில்களை அவற்றின் அறங்காவலர்களிடமிருந்து பறித்ததும், பின்னர், சிலஆண்டுகளில் அவற்றை அறங்காவலர்களிடமே ஒப்படைத்ததும் சமயம்சார்ந்த அரசியல் உள்நோக்கம் கொண்டனவாகவே அறியப்படுகின்றன. விடுதலைக்குப் பிறகும், மதச்சார்பின்மை என்ற கோட்பாட்டை மேற்கொண்டு இந்திய நடுவண் அரசும், மாநில அரசுகளும் இந்து மதவளர்ச்சிக்கு எதிராகவே நடைமுறைப்படுத்தி வருகின்றன. மதச்சார்பற்ற அரசு, சிறுபான்மையினர் நலம் என்ற பெயரில் அளவற்ற சலுகைகளை வழங்கியது. பெரும்பான்மை மக்கள் போற்றியசமயங்களுக்கு எவ்வித உரிமைகளையும் வழங்காததோடு, அவற்றின் உரிமைகளில் மறைமுகமாகத் தலையிட்டு அவற்றின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளில் தீங்கிழைத்தன. இன்றுவரை இழைத்துப் வருகின்றன.

பெரும்பான்மைச் சமூகத்திற்குப் பெரிய அநீதி :

மதச் சார்பின்மை என்பது, அரசுக்கு என்று எவ்வித மதக் கோட்பாடும் இல்லை! எல்லாமதங்களையும் அது சமமாகப் போற்றும் என்பதே பொருள், ஆனால், மத்திய மாநில அரசுகள் இந்திய நாகரிகத்தின் ஊற்றுக்கண்களாக விளங்கும் இந்துமதத்தையும், ஆலயங்களையும், இந்துசமயநிறுவனங்களையும், அரசியல் ஆதாயங்களுக்காக, சிறுபான்மையினர் வாக்குகளுக்காக அவமதித்தும், தாழ்ச்சியுறச்செய்தும் வருகின்றன. பெரும்பான்மை மக்களின் இந்துமத அமைப்புக்களின் அன்றாடச் செயற்பாடுகளிலும் தேவையற்ற குறுக்கீடுகளைத் திட்டமிட்டு நிகழ்த்தி இவற்றின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை இட்டு வருகின்றன. இவற்றை முறையாக நீக்கும் பெரு முயற்சியில், பேரியக்கம் காண்பதில் இந்து மக்கள் ஈடுபடவேண்டிய தருணம் இதுவே என்று ஞானசம்பந்தம் கருதுகின்றது. இவை பிறமதங்களுக்கு எதிரான எண்ணத்தில் எழுந்தன அல்ல. அரசை எதிர்த்துப்

போராடும் எண்ணித்தில் எழுந்தனவும் அல்ல. தாய்ச்சமயத்தைக் காக்க வேண்டும்; அதன்வழியே தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய தமிழ் நாட்டையும், இந்தியக் கலாச்சாரத்தோடு கூடிய இந்தியப் பெருநாட்டையும், பாதுகாக்க வேண்டும் என்ற நன்மையான துடிப்பின் வெளிப்பாடாகவே எழுப் ப்படுகின்றன.

ஒன்றொன்றாய்ப் பின்தொடரும் :

ஞானசம்பந்தம் இந்துமத வளர்ச்சிக்குற்ற தடைகளை இங்கே பொதுப் படச் சுட்டிக் காட்டியுள்ளது. முற்றறித்த மூன்று நிலைகளையும், தொடர்ந்துவரும் இதழ்களில், தனித்தனியாக எடுத்துக் கொண்டு, உரிய ஆதாரங்களோடு வெளிப்படுத்த எண்ணமிட்டுள்ளது. இந்துமக்கள், புத்துணர்வு பெற்றுத் தாய்ச்சமய வளர்ச்சிக்கு உரியபங்கு பணியாற்ற முன்வருவார்களாக.

சைவம் காப்போம்: தமிழகத்தைக் காப்போம்!
இந்துமதம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்!

இருபத்தெட்டு ஆகமங்கள்

ஸத்யோஜாதம் முதலிய ஐந்து திருமுகங்களினின்றும் இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின என்று காரணாகமம் கூறுகின்றது. அதாவது, ஸத்யோஜாதம் என்ற முகத்தினின்றும் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்ற ஐந்து ஆகமங்களும், வாமதேவத்தினின்றும், தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்ற ஐந்து ஆகமங்களும், அகோரமுகத்தினின்றும் விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநிலம், வீரம் என்ற ஐந்து ஆகமங்களும், தத்புருஷமுகத்தினின்றும் ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்ற ஐந்து ஆகமங்களும், ஈசானமுகத்தினின்று ப்ரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற எட்டு ஆகமங்களும் தோன்றின.

— சைவ சமயப் வரலாற்றுப் பார்வை.

குருபாதம்

திருக்கயிலாயப் பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
ஆதிபரமாசாரியர் அவதரித்த மூவலூரில்
ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளின்
திருப்பெயரில் அமைக்கப்பெற்றுள்ள
நூலகக் கட்டிடத் திறப்பு விழாவில் வழங்கியருளிய

ஆசியுரை

10—9—1989

"வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப் பொருளே
ஏன மா வெயிறுமையும் எலும்பும்
ஈடுதாங்கிய மார்புடையானே
தேன்நெய் பால்தயிர் ஆட்டுகந்தானே
தேவனே திருஆவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சல் என்றருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே"

திருவருள் பொருத்தம்!

இத்திருப்பாடலைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஆவடுதுறையில் மாசிலாமணி ஈசரின் சந்நிதானத்தில் பாடியருளினர். மாசிலாமணிஈசரின் சந்நிதியில் சுந்தரர் ஓதும்போது "வழித்துணை மருந்தே" என்று அருளியிருப்பதில், திருவருள் வலத்தால் ஒரு குறிப்பு அமைந்திருப்பதை ஊன்றிப் பார்த்தால் புலனாகும்.

சுந்தரர் காலத்திற்குப் பிறகு 700 ஆண்டுகள் கழித்துத் திருஆவடுதுறையில் ஞானபீடம் அமைத்துச் சித்தாந்தச் செந்நெறியை அன்பர்களுக்கு வழிகாட்டி நெறிப்படுத்திய ஸ்ரீநமசிவாய மூர்த்திகள் அவதரித்த தலம் இந்த மூவலூர் ஆகும். இங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயர் வழித்துணைநாதர் என்பதாகும். சுந்தரர் ஆவடுதுறைப் பெருமானை 'வழித்துணை மருந்தே' என்று போற்றிய குறிப்பையும், இங்குள்ள வழித்துணை நாதர் தாம் எழுந்தருளியுள்ள இத்தலத்தில் நமசிவாயமூர்த்தியை அவதரிக்கச் செய்து திருஆவடுதுறைக்குக் குருமுதல்வராக

அனுப்பி வழிகாட்டி வரச்செய்தருளிய அமைப்பையும் இணைத்துச் சிந்தித்தால் ஒரு பொருத்தம் உள்ளமையை உணரலாம். இது திருவருளால் அமைந்த பொருத்தமாகும்.

மூவலூர் - பெயர்க் காரணம் :

இத்தலம் மூவலூர் என வழங்கி வருகிறது. மூவர் ஊர் என்பது மூவல் ஊர் எனத்திரிந்து வழங்குகிறது. அயன், அரி, அரன் ஆகிய மூவராலும் பூஜிக்கப் பெற்ற தலம் இது ஆதலின் மூவர்ஊர் என ஆயிற்று. இறைவன் திரிபுரங்களை அழிக்கமுற்பட்ட போது அரி, அயன் முதலான தேவர்கள் (அரன் நீங்கலாக) தம்மால்தாம் இந்தக் காரியத்தை இறைவன் செய்யமுடிகிறது என்று நினைத்தனர். அண்ட சராசரங்களிலும் நீக்கமற நிறைந்திலங்கும் பெருமான், இதனை உணர்ந்து, எச்செயலையும் கருவி கரணங்களின் துணையின்றிச் சங்கற்ப மாத்திரையிலேயே செய்து முடிப்பவர் தாம் என்பதைக் காட்டுவண்ணம் சிரித்தே புரத்தை எரித்தார். அரியும் அயனும், இங்ஙனம் நினைந்த பாவம் நீங்கக் கழுவாய் யாது என்று இறைவனிடம் பணிந்து விண்ணப்பித்த போது. "காவிரிக் கரையில் புன்னைமரத்தின் அடியில் சிவலிங்க வடிவத்தில் நாம் இருக்கிறோம் வழிபடுக" என்றருளினார். இருவரும் இங்கு வந்து, சிவலிங்க வடிவத்தைத் தேட முயன்ற போது, அவர்களின் கண்களுக்கு அது தென்படாது இருந்தது. அப்பொழுது இருவரும் கலங்கினர். இந்தச்சமயத்தில் சிவ அம்சமாகிய அரன் (உருத்திரன்) இவர்களை நோக்கி வந்து, சிவலிங்க வடிவம் எழுந்தருளியுள்ள இடத்திற்கு அழைத்துச்சென்று வழி காட்டினார். இவர்கள் இப்பெருமானைப் பூஜித்தும் காட்டுக என்று வேண்டிக்கொள்ள அரன் சிவபெருமானைப் பூஜித்தும் காட்டினார் இதனால் இங்கு எழுந்தருளியுள்ள பெருமான் வழித்துணைநாதர் என்றும் வழிகாட்டும் வள்ளல் என்றும் மார்க்கசகாயநாதர் என்றும் போற்றப்பெறுகிறார். இங்ஙனம் அயன், அரி, அரன் ஆகிய மூவராலும் வழிபட்டதாதலின் இத்தலம் மூவர் ஊர் எனப் பெற்றது. பின்னே மூவலூர் எனத் திரிந்து வழங்கலாயிற்று.

அரன் - உருத்திரன் :

இங்குச் சில கருத்துக்களைத் தெளிவு படுத்திக் கொள்ளல் வேண்டும். அரன் என்பது உருத்திரனைக் குறிக்கும் என்பதும் அவ் அரன் சிவஅம்சம் என்பதும் சிவபெருமான் அயன், அரி, அரன் எனும் மூவருக்கும் மேலானவர் என்பதும், அரன் சிவவழிபாட்டில் சிவநேயத்தில் ஒருபொழுதும் புறம் போனதாக வரலாறு இல்லை என்பதும் அக்கருத்துக்கள் ஆகும். 'மூவராலும் அறிய ஒண்ணு முதலாய ஆனந்த மூர்த்தி' என்று திருவாசகம் குறிப்பதும் ஈண்டு நினையத்தகும்.

வைப்புத் தலம் :

இந்தத் தலத்தில் எழுந்தருளியுள்ள வழித்துணைநாதரைத் திருஞானசம்பந்தர் போற்றிப் பாடியுள்ளார் என்று சேக்கிழார் குறிக்கின்றார்.

" திரைத்தடம்புனல் பொன்னிசூழ் திருத்துருத்தி யினில்
வரைத்தலைப் பசும்பொன் எனும் வண் தமிழ்ப் பதிகம்
உரைத்து மெய்யுறப்பணிந்து போந்துலவும் அந்நதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுதலார் கழல்பணிந்தார் "

என்பது பெரியபுராணப்பாடல். ஆனால் இத்தலத்திற்குரிய திருஞானசம்பந்தர் பதிகம் கிடைக்கவில்லை. இத்தலம் இன்று வைப்புத் தலமாக விளங்குகிறது திருநாவுக்கரசர் பூவனூர் திருப் பதிகத்தில் ஒரு பாடலிலும், திருநெய்த்தானம் திருத்தாண்டகத் தில் ஒரு பாடலிலும் இத்தலத்தை வைத்துப் பாடியுள்ளார்,

" பூவனூர், தண்புறம்பயம் பூம்பொழில்
நாவலூர், நள்ளாறொடு நன்னிலம்,
கோவலூர், குடவாயில், கொடுமுடி
மூவலூர் முக்கண்ணனூர் காண்மினே "

" தந்தை தாயில்லாதாய் நீயேஎன்றும்
தலையார் கைலாயன் நீயேஎன்றும்
எந்தை எம்பிரானானாய் நீயே என்றும்
ஏகம்பத்து என்ஈசன் நீயேஎன்றும்
முந்திய முக்கண்ணாய் நீயேஎன்றும்
மூவலூர் மேவினாய் நீயே என்றும்
சிந்தையாய் தேனூராய் நீயேஎன்றும்
நின்றநெய்த்தானா என் நெஞ்சுளாயே "

என்பன அவ்விரு பாடல்கள். சுந்தரர் ஆவடுதுறைப் பதிகத்தில் ஒரு பாடலில், 'வழித்துணை மருந்தே' என்று இப்பெருமான் திருப் பெயரைக் குறிக்கிறார் என்பது முன்பே சிந்திக்கப்பெற்றது.

வள்ளல் - மயிலாடுதுறைப் பெருமான் :

இங்கு இன்னும் ஒருகுறிப்பும் நினைக்கத்தக்கது. மயிலாடுதுறைப் பெருமானுக்கு மயூரநாதர் என்ற திருப்பெயர் இருப்பதை மட்டுமே பலரும் அறிந்துள்ளனர். அப்பெருமானுக்கு, 'வள்ளல்' என்னும் திருப்பெயர் உண்மையை அறிகின்றிலர். இதனைத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தம் திருப்பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர். திருநாவுக்கரசர்,

" கொள்ளும் காதன்மை பெய்துறும் கோல்வளை
உள்ளம் உள்கி உரைக்கும் திருப்பெயர்
வள்ளல் மாமயிலாடுதுறை உறை
வெள்ளம் தாங்கு சடையனை வேண்டியே "

என்று போற்றுகிறார். இதில், "திருப்பெயர் வள்ளல்" என்று குறிக்கப்படுவதனால் மயிலாடுதுறைப் பெருமான் திருப்பெயர் வள்ளல் என்றுணரலாம். திருஞானசம்பந்தர், கரவு இன்றி நன்மா மலர்கொண்டு இரவும் பகலும் தொழும் அடியார்கட்குச் சிரம் ஒன்றிய செஞ்சடையானாகிய இறைவன் வரமாக மயிலாடுதுறையில் உள்ளான் என்கிறார் ஞானசம்பந்தர். வரமாக என்பது வள்ளலாக எழுந்தருளியுள்ளான் என்பதை உணர்த்துகிறது. வள்ளலாக இருக்கிறான் என்பதையே வரமாக என்றுகுறித்துள்ளார். "வரதன் நாமம் நமச்சிவாயவே" என்ற ஞானசம்பந்தர் வாக்கும் வரதன் என்பது வள்ளலைக் குறித்தல் காண்க.

" கரவு இன்றி நன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரம்ஒன்றிய செஞ்சடையான் வாழ்
வரமா மயிலாடு துறையே "

என்பது அப்பாடல். இதில் 'வரமா' என்பது வரதனை என்னும் பொருளைத்தருகிறது. வரதன் என்னும் சொல் வரத்தைத் தருபவன் என்னும் பொருளையுடையது. அதாவது வள்ளன்மை உடையவன் - வள்ளல் என்னும் பொருளில் ஆளப்படுகிறது. எனவே திருஞானசம்பந்தர் இச்சொல்லால் இப்பெருமானை வள்ளல் எனக்குறித்துள்ளார். வரதன் எனும் சொல் சிவபெருமானைக் குறிக்கும் சொல்லாய் இருக்கப் பிற்காலத்தில் வைணவர்கள் பெருவழக்காக இதனைப் பயன் படுத்தியமையால் இது வைணவசமயச் சொல்போன்று தோன்றுகிறது. இதுபோன்று 'ஆரா அமுது', 'பக்தவத்சலம்' போன்ற சொற்களும் சிவனைக் குறிக்கும் வழக்கம் இருந்தும் பெரும்பான்மை வழக்குப் பற்றி வைணவ சமயச் சொற்களாகக் கொள்கின்றனர். திருவாசகத்தில் சிவபுராணத்தில், மாணிக்கவாசகர் இறைவனை, "ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே !" என்று போற்றுகிறார். "ஆர்கிலா அமுதை மறந்து உய்வனோ" என்பது அப்பர் அருள்வாக்கு. இதனால் ஆரா அமுது - ஆரா அமுதன் என்னும் சொற்கள் சிவபெருமானைக் குறிக்கும் சொற்கள் என உணரலாம். திருக்கழுக்குன்றத்தில் மலைமீதுள்ள சுவாமிபெயர் வேதபுரீசுவரர் என்பது. கீழே தாழக் கோயில் என வழங்கும் சிவன்கோயிலில் உள்ள சுவாமிபெயர் பக்தவத்சலேசுவரர் என்பதாகும். பக்தரிடத்து வாத்சல்யம் - அன்புள்ளவர் என்பதே அதன் பொருள். இதுவும் பழக்க மிகுதியால் வைணவப் பெயராகக் கொள்கின்றனர்.

நாற்றிசை வள்ளல்கள் :

எனவே மயிலாடுதுறைப் பெருமானுக்கு, 'வள்ளல்' என்ற திருப்பெயர் உண்டு என்பதை அறிகின்றோம். இவர் நடுவில் வள்ளலாக வீற்றிருக்க, நாற்றிசையிலும் நான்கு வள்ளல்கள் வீற்றிருந்து அருளுகின்றனர். மயிலாடுதுறையிலிருந்து மேற்குத் திசையில் - இங்கு மூவலூரில் வழிகாட்டும்வள்ளல்; கிழக்குத் திசையில் - விளநகரில் துறைகாட்டும்வள்ளல்; வடக்குத்திசையில் - மயிலாடுதுறைப் பகுதியிலேயே கைகாட்டும்வள்ளல்; (இவர் எழுந்தருளியுள்ள கோயில் வள்ளலார்கோயில் என்றே வழங்கிவருகிறது.) தெற்குத்திசையில் பெருஞ்சேரியில் மொழி காட்டும் வள்ளல் என எழுந்தருளியுள்ளனர்.

வழிகாட்டும் வள்ளல் வழங்கியருளிய குருநாதர் :

இந்தத்தலத்தில் எழுந்தருளியுள்ள வழிகாட்டும் வள்ளலாகிய வழித்துணைநாதர்தான், சித்தாந்தச் செந்நெறியை உயிர்கள் அடைந்துய்ய வழிகாட்டும் குருநாதரை நமச்சிவாய மூர்த்தியைச் சைவ உலகுக்குத் தந்தருளினார். குருநாதரும் வழிகாட்டுபவர் தாம். மனித உயிர்கள் உய்யவேண்டிய வழியினைக் காட்டும் கருணையாளர்கள் அவர்கள். அதனால், குருநாதரைச் சந்நிதானம் என்றும், பண்டாரசந்நிதி என்றும் போற்றுகின்றோம். சந்நிதானம் என்றால் இறைவருளை உடைய சந்நிதியாக - வழியாக இருந்தருளுபவர் என்றும், பண்டாரசந்நிதி என்றால் மூலபண்டாரமாகிய திருவருளைப்பெறுதற்குவழிகாட்டி அருளுபவர் என்றும் பொருள் தரும்.

திருக்கயிலாய பரம்பரை :

இத்தலத்தில் அவதரித்த ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் காலம் 14 ஆம் நூற்றாண்டு ஆகும். திருக்கயிலாய பரம்பரையில் உபதேச முறையில் ஸ்ரீ கண்ட பரமசிவத்திடத்து நந்தியம்பெருமானும் நந்தியினிடத்துச் சனற்குமாரரும், சனற்குமாரரிடத்துச் சத்திய ஞானதரிசனிகளும், சத்திய ஞானதரிசனிகளிடத்துப் பரஞ்சோதி மாமுனிவரும் உபதேசம் பெற்றனர். இது அகச்சந்தானம் ஆகும். இனி மண்ணுலகில் பரஞ்சோதியினிடத்து மெய்கண்டாரும், மெய்கண்டாரிடத்து அருள்நந்திசிவமும், அவரிடத்து மறைஞான சம்பந்தரும் அவரிடத்து உமாபதிசிவமும் உபதேசம் பெற்றனர். இது புறச்சந்தானம் ஆகும். அருணந்திசிவத்திடம் உபதேசம் பெற்றவரே குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. உமாபதிசிவத்திடத்து உபதேசம் பெற்றவர் அருள்நமச்சிவாயர். இவரிடத்திலிருந்து உபதேசபரம்பரை இரண்டு கிளைகளாகப்பிரிந்தது. ஒன்று சித்தர்சிவப்பிரகாசர்

வழியும், பிறிதொன்று காழிக்கங்கை மெய்கண்டாரின் வழியும் ஆக அமைந்தது. சித்தர்சிவப்பிரகாசரிடத்து உபதேசம் பெற்றவர் திருவாவடுதுறை ஆதீன ஆதிகுருமுதல்வர் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் ஆவார். காழிக்கங்கை மெய்கண்டாரின் வழிவழி உபதேசக் கிரமத்தில் ஏழாவதாக அமைந்த ஸ்ரீ குருஞான சம்பந்தரே தருமை ஆதீன ஆதிகுருமுதல்வர் ஆவார்.

ஆதீனத் தொண்டுகள் :

ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள், இறையருள் பரிபூர்ணமாக நிறைந்த பேரருளாளராக விளங்கினர். இப்புனிதப்பெரியார் அவதரிக்கும்புண்ணியப்பேற்றைத்தனதாக்கிக்கொண்ட பெருமையுடையது இம்மூவலூர். இவர் அருள்தான் இன்றும் சைவ சித்தாந்தச் செந்நெறியையும் மரபையும் காத்துவருகின்றது. திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானங்கள் பலரும் சிறந்த அருளாளர்களாகவும், கல்விமான்களாகவும்திகழ்ந்துவந்துள்ளனர் இவ்வாதீனம் சைவத்திற்கும், தமிழிற்கும் செய்த தொண்டுகள் பல. திரிசிரபுரம்மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களை ஆதரித்ததன் மூலம் தலபுராணங்களின் வளர்ச்சிக்கும் டாக்டர் திரு. உ. வே சுவாமிநாத ஐயரை ஆதரித்ததன் மூலம் சங்க இலக்கிய வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்துள்ளது. மாதவச் சிவஞான முனிவரை உருவாக்கி ஆதரித்ததன் மூலம் சிவஞான போதத்திற்கு அரிய பேருரை, சிற்றுரை வெளிவரச் செய்துள்ளது. கச்சியப்ப முனிவரை ஆதரித்ததன் மூலம் விநாயக புராணம், தணிகைப்புராணம் எனும் அரிய நூல்கள் கிடைக்கச்செய்துள்ளது. மேலும் பல சமயநூல்களை அச்சிட்டு வெளியிட்டு சமயப்பணியும் தமிழ்ப் பணியும் புரிந்துவருகின்றது.

அரும்பெரும்விழா :

இப்பொழுது பீடத்திலுள்ளவர்கள் 23ஆவது மகாசந்நிதானம் ஆவார்கள். இவர்கள் இவ்வாதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளை நினைவுகூர்ந்து போற்றும்வண்ணம் அவர்கள் அவதரித்த இத்தலத்தில் நினைவுச் சின்னமாக நால்நிலையத்தை அழகுற அமைத்து விழாக் கொண்டாடியிருப்பதும், இவ்விழாவில் மெய்கண்டார், நமச்சிவாய மூர்த்திகள், மற்றும் 16 ஆவது மகாசந்நிதானம், 17 ஆவது மகாசந்நிதானங்களின் திருவுருவங்களை எழுந்தருளுவித்துப் போற்றியுள்ளமையும் இத் திருவுருவங்களை எழுந்தருள்விக்க மகாசந்நிதானங்கள் இங்கு இன்று எழுந்தருளியுள்ளமையும் மகிழ்ச்சியைத்தருகிறது.

இங்ஙனம் கடந்த 500 ஆண்டுகட்கும் மேலாகச் சைவமும் தமிழும்தழைத்தினிதோங்க அரும்பணியாற்றிவரும்இவ்வாதீனம், செழித்து வளர்ந்து சிறந்தோங்க ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க குருமரபு ; வளர்க சைவநெறி.

"அபூர்வ கிரஹ நிலை"

திரு. A. V. சுவாமிநாத சிவாசாரியார்

தலைமையாசிரியர், வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

" திங்களுச்சிமேல் விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம் மிறைவன் என்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சியால் வணங்குந் தன்னடியார்கட் கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே."

(திருஞானசம்பந்தர்.)

கிரஹங்கள் மேஷம் முதலான பன்னிரண்டு ராசிகளிலும் அவைகளுக்கு உண்டான காலங்களில் சஞ்சரிப்பதற்கு கோசாரம் என்று பெயர். இந்த கிரஹங்கள் ஒன்றனோடொன்று பல சமயங்களில் கூடிநிற்கும். இப்படிக் கூடுகின்ற நிலையானது அந்தந்தத் தன்மையைப் பொறுத்துப் பலவிதமான பலன்களை அளிக்கும். இவற்றில் எப்பொழுதாவது அபூர்வமாகச் சில கிரஹங்களின் சேர்க்கை ஏற்படும்.

தற்போது சனி, செவ்வாய், புதன் ஆகிய மூன்றுகிரஹங்களும் ஒன்று கூடித் தங்களுக்கு ஏழாமிடத்தில் இருக்கும் குருபகவானைப் பார்ப்பதோடு அவருடையபார்வையையும் பெறுகின்றன. இந்நிலை மிக அபூர்வமான ஒன்ருகும்.

அதாவது சனிபகவான் தனுர் ராசியில் தற்போது சஞ்சரித்து வருகிருர். இவர் இருக்கின்ற இடத்திலிருந்து ஏழாமிடத்தில் அதாவது மிதுன ராசியில் குருபகவான் இருந்து கொண்டு சனி பகவானைப் பார்க்கிருர். இப்படி சனியும், குருவும் ஒருவரையொருவர் பரஸ்பரம் ஏழாவது பார்வையாகப் பார்த்துக்கொண்டிருக்கிறநிலையில் நடக்கின்ற தை மாதம் 8 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நாழிகை 42-28க்கு செவ்வாய் (அங்காரகன்) தற்போது சஞ்சரித்துவரும் விருச்சிக ராசியிலிருந்து தனுர்ராசியில் பிரவேசிக்கிருர். ஆக இவரும் சனி பகவானோடு சேர்ந்து விடுகிருர். இதனால் மூன்று வலிமை மிக்க கிரஹங்கள் ஒரே வரிசையில் இணைகின்றன. இந்நிலையை "வசுந்தரா யோகம்" என்று சிலர் கூறுகின்றனர். தனுர் ராசியிலிருக்கும் செவ்வாய், மாசிமாதம் 18 ஆம் தேதி மகர ராசியில் பிரவேசிக்கிருர். அதுவரை அதாவது 22—1—90 முதல்

3—3—90 வரை இந்நிலை இருக்கும். இதனால் பொதுவாக, பல தீய உற்பாதங்களே ஏற்படும். மதக் கலவரங்கள், இயற்கைச்சீற்றங்கள், விபத்துக்கள், பூகம்பம் இவைகள் உண்டாகும். மேலும் அரசர்களுக்கும் மந்திரிகளுக்கும் பீடையும், ஆட்சி மாறுதலும் நிகழும்.

இம்மூன்று கிரஹங்கள் சஞ்சாரம் செய்கின்ற ராசியில் பிறந்தவர்களும், இந்த கிரஹங்களின் பார்வையைப் பெறுகின்ற ராசிக்காரர்களும் இந்தக் காலக்கட்டத்தில் பல கஷ்டங்களைச் சந்திக்க நேரிடும். அவர்களின் நிலையையும், அதற்கான பரிகாரங்களையும் சிறிது பார்ப்போம்.

மிருகசீரிஷம் கடைசி 2 பாதங்கள் திருவாதிரை 4 பாதங்கள், புனர்பூசம் 3 பாதங்கள் இவற்றில் பிறந்த மிதுன ராசிக்காரர்களுக்கு ஜன்ம குருவின் கால கட்டமாக இருப்பதோடு சனி, செவ்வாய், இவர்களின் இணைந்த ஏழாவது பார்வையும், கிடைக்கிறது. இதனால் இவர்களுக்குச் சில கஷ்டங்கள் நேரிடும். முக்கியமாக குடும்பத்தைவிட்டுப் பிரிதல், மனைவியின் உடல்நலக்குறைவு, எப்போதும் மனக்குழப்பம், மனஸ்தாபம் இவைகள் ஏற்படும். இந்த ராசிக்காரர்கள் ஜன்ம குருவிற்காக இதுவரை செய்து வந்த பரிகாரங்களோடுகூட சனி, செவ்வாய் கிரஹங்களுக்கும்பரிகாரங்கள் செய்யவேண்டும். சனிபகவானுக்கு எள்ளுதீபம், வன்னி பத்திரத்தால் அர்ச்சனை, துவரைசாதம் நிவேதனம் இவைகளையும் செய்யலாம். வேளூர், திருநள்ளாறு முதலிய தலங்களுக்கும் சென்று வழிபடவேண்டும்.

உத்திரம் கடைசி 3பாதங்கள், ஹஸ்தம் 4பாதங்கள், சித்திரை முதல் 2 பாதங்கள் இவைகளில் பிறந்த கன்யா ராசிக்காரர்கள் செவ்வாயோடு கூடியசனிபகவானின்(10-ம்பார்வை)பார்வையைப் பெறுகிறார்கள். மேலும் இந்தராசிக்காரர்களின் உத்யோகத்தானமாகிய பத்தாமிடத்தை சனி - செவ்வாய் - இருவரும் இணைந்து பார்க்கிறார்கள். இதனால் இவர்கள் செய்கின்ற காரியங்கள் பிறரால் குறை கூறப்படுவதாகவே இருக்கும். உத்யோகத்தில் பல இடர்பாடுகள், பதவி இறக்கம் போன்றவைகளும், விரோதங்களும் இருந்துவரும். பிரயாணங்களிலும் கவனம் தேவை. சனி பகவானுக்கு ப்ரீதி செய்துகொள்ளவும்.

விசாகம் கடைசி பாதம், அனுஷம் 4 பாதங்கள், கேட்டை 4 பாதங்கள் இவற்றில் பிறந்த விருச்சிக ராசிக்காரர்களின் இரண்டாம்இடமாகிய குடும்பஸ்தானத்தில் சனியும், செவ்வாயும் கூடிநிற்க, இவர்களுடைய ஆயுள்ஸ்தானமாகிய எட்டாமிடம், சனி, செவ்வாய் இவர்களால் பார்க்கப்படுகின்றதான சூழ்நிலை

உருவாகியுள்ளது. இவர்களின் குடும்பச்சூழ்நிலை திருப்திகரமான தாக இருக்காது. பேச்சில் அதிக கவனம் வேண்டும். வீண் விவகாரங்களில் தலையிடும்படியாக நேரிடும் பிரயாணங்களில் விபத்துகள் நேரிடலாம். ஆயுள்காரகனாகிய சனிபகவானுக்கும், ஜன்ம ராசி அதிபதியாகிய அங்காரகனுக்கும் ப்ரீதி செய்து கொள்ளவும்.

மூலம் 4 பாதங்கள், பூராடம் 4 பாதங்கள், உத்திராடம் முதல் பாதம் இவற்றில் பிறந்த தனுர் ராசிக்காரர்களுக்கு இது ஒரு சோதனையான காலம்தான். ஜன்ம சனியின் பிடியில் வாடிக் கொண்டிருக்கும் இவர்கள் ராசியில் செவ்வாயும் பிரவேசிப்பதால் இன்னும் கொஞ்சம் சிரமம் அதிகமாகும். சகோதரர்கள், மனைவி, குழந்தை இவர்களுக்கு உடல்நலம் பாதிக்கும். பணத்தட்டுப்பாடு, வீண்விரயம், கௌரவக் குறைவு இவைகள் ஏற்படும் சனி, குரு இவர்களுக்கு ப்ரீதி செய்து கொள்ளவும்.

பூரட்டாதி கடைசி பாதம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்த மீனராசிக்காரர்கள் ஒரு சில கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும் தம்பதிகளிடத்தில்மனஸ்தாபம்,உத்தியோகத் தில் இடைஞ்சல் இவைகள் ஏற்படும்.

மற்ற ராசிக்காரர்களும் இந்தக் காலகட்டத்தில் எச்சரிக்கை யுடனேயே இருத்தல் அவசியம். ஏனென்றால் சகல ஜீவராசி களுக்குமே ஒரு சிலதீங்குகள் நேரிடும் என்று கணக்கிடப்படுகிறது. ஆகையால் இந்தக் காலகட்டத்தில் அனைவருமே தனியாகவோ அல்லது கூட்டாகவோ வழிபாடுகள் நிகழ்த்துதல் அவசியம். மேலும், கோளறு திருப்பதிகம், ஸ்ரீ வைத்யநாத அஷ்டகம், ம்ருத்யுஞ்சய ஸ்தோத்திரம், சஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, லலிதாசகஸ்ரநாமம் இவைகளைப் பாராயணம் செய்யவேண்டும்.

மேலும் திருநள்ளாறு, மாயூரம்-வள்ளலார்கோயில், வேளூர், சூரியனார்கோயில் முதலிய திருத்தலங்களுக்கும் சென்று தரிசித்து வரவேண்டும்.

தைமாதம் 14ஆம்தேதி வெள்ளிக்கிழமை (26—1—90) அன்று சுக்கிரன் வக்ரகதியாக மகரத்திலிருந்து தனுசுக்கு வருகிறார். வக்ர கதியில் இருக்கும் கிரஹங்கள் தாம் முன்பிருந்த இடத்தின் பலனையே கொடுக்கும் என்பதால் இந்த சுக்ர சேர்க்கையால் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் ஏற்படாது

" லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து "

ஸ்ரீ காமதகனமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,
தருமபுரம்.

தியான சுலோகம்

பஸ்மோத்தூளித விக்ரஹம் சசிதரம் கங்கா பணீமண்டிதம்
டங்கம் க்ருஷ்ணம்ருகம் ததாநமமலம் வீராஸநே ஸுஸ்திதம்
அங்கே ஸவ்யகரே பரம் கரதலம் விந்யஸ்ய யோகேரதம்
வ்யாகர த்வக்வஸநம் லலாடஜத்ருசா தக்தஸ்மரம் த்வாம் பஜே.

பொழிப்புரை :

திருநீறுபூசிய திருமேனியுடன் சந்திரனைத் தாங்கி, கங்கை ஸர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்டு, மழுமான் ஏந்தி, வீராஸனத்தி லிருந்து, மடியில் வலதுகைமேல் இடது கையை வைத்துக்கொண்டு யோகத்திலமர்ந்து, புலித்தோலாடை அணிந்து, நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்த உன்னை வணங்குகிறேன்.

விளக்கம் :

உமையம்மை சிவபெருமானைப் பிரிந்து இமவான் மகளாகப் 'பார்வதி' என்னும் திருப்பெயரோடுதோன்றி வளர்ந்துபெருமானைத் திருமணம் புரிந்து கொள்ளத் தனித்திருந்து தவம்செய்து வந்தாள். பெருமான் சனகாதி முனிவர்களுக்காகக் கணப்போது யோகியா யிருந்தார். அவ்வொருகணம் தேவர்களுக்கும், மக்களுக்கும் பல யுகங்களாயின; பெருமான் உமையம்மையைப் பிரிந்து இருந்ததால் உயிர்களனைத்தும் ஆண் பெண் உறவின்றியிருந்தன. உலகவளர்ச்சி தடைப்பட்டு நின்றது. இந்திரன், நான்முகன், திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் கூடிப் பெருமானை அம்மையோடு கூட்டினா லன்றி உய்தியில்லை என உணர்ந்து மன்மதனை அழைப்பித்துச் சிவபெருமான் யோகநிலை நீங்கிப் பார்வதி தேவியை மணம்புரிந்து கொள்ளுமாறு காமஉணர்வூட்டும் மலர்க்கணைகளை அப்பெருமான்

மீது செலுத்துக எனப்பணித்தனர். மன்மதன் முதலில் மறுத்தான். பின் நான்முகன் முதலியோர் சாபத்தால் உயிரிழப்பதைக்காட்டிலும் பெருமான் மீது மலர் அம்பு தொடுத்து மாள்வது மேல் என முடிவு செய்து ஐம்மலர்க்கணை ஏந்தித் தென்றல் தேர் ஏறித் திருக்கோயிலை நோக்கிச் சென்ருன். இறைவன் பணித்த வண்ணம் நந்திதேவர் மன்மதனை மேல் புற வாயில் வழியாக உள்ளே செல்க எனப் பணித்தார். காமன் முதலில் மயங்கினுன். இரதிதேவி தேற்றத் தெளிந்தான். கருப்பு வில்லில் சுரும்பு நாண் ஏற்றிப் பஞ்ச பாணங்களைப் பரமன் மீது தொடுத்தான். மலர்க்கணைகள் பட்ட அளவில் பெருமானது நெற்றிவிழி திறந்தது. மன்மதன் நீருனுன். இரதிதேவி புலம்பிப் பெருமானைத் துதித்தாள். பார்வதிதேவியை மணம்புரிந்து கொள்ளும் நாளில் உன் மணவாளன் உயிர்பெற்றெழுவான் என்று அருள்புரிந்தார். அவ்வாறே பார்வதிதேவியைப் பெருமான் மணம் புரிந்து கொண்ட நாளில் மன்மதன் இரதிக்கு மட்டும் உருவுடையவனுகவும் ஏனையோர்க்கு உருவமற்ற அனங்கனுகவும் இருந்து அவன் தன் தொழிலைச் செய்துவர அருள்புரிந்தார்.

இறைவன் காமனை எரித்ததால் காமதகன மூர்த்தி எனப் பெறுவார். இறைவனது எட்டு வீரச் செயல்களில் இது ஒன்ருகக் கூறப்படும். இவ்வாறு நிகழ்ந்த இடம் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்துள்ள குறுக்கை என்னும் தலமாகும்.

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

" கழைபடு காடுதென்றல் குயில்கூவ வஞ்சு
கணையோ னணைந்து புகழும்
மழைவடி வண்ணனெண்ணி மகவோனை விட்ட
மலரான தொட்ட மதனன்
எழில்பொடி வெந்துவீழ விமையோர் கணங்கள்
எரியென்றி றைஞ்சி யகலத்
தழல்படு நெற்றி யொற்றை நயனஞ்சிவந்த
தழல்வண்ண னெந்தை சரணே "

(— திருநாவுக்கரசர்)

திருச்சிற்றம்பலம்

திருமுறைகளைப் போற்றுவோம்*

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்

துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

அப்பரின் தேவாரம் வாழ்வின் பல நிகழ்ச்சிகளை நமக்குக் காட்டும் பக்தி உருக்கமான சித்திரமாகும். சம்பந்தர், சுந்தரர் என்ற இரு அருளாளர்களைக் காட்டிலும் அப்பர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நம்மை அதிகம் கவர்கின்றன. அவர் சைவத்திலே பிறந்து, பின் சமணத்திலே சேர்ந்து அதன் பின் இறை அருளால் மீண்டும் சைவத்துக்கே வந்து உழவாரத்திருப்பணி மூலமாக ஞான ஒளி பெற்றவர். திருநாவுக்கரசர் 80 ஆண்டுகட்கு மேல் உயிர் வாழ்ந்தார். அவருடைய நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளப் பல பாடங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

வழி தவறியவர்கள் :

அவர் தமிழ்நாட்டில் சைவக் குடியில் பிறந்தார். இளவயதில் சமண மதத்திற்கு மாறினார். பின் தன் தவற்றை உணர்ந்து மீண்டும் சைவ மதத்திற்குத் திரும்பி வந்தார். நம் தமிழ் நாட்டில் பிறந்தும் நம் தமிழ் மொழியையும், மரபுகளையும், நூல்களையும், மதத்தையும் கற்க, தெளிய வாய்ப்பிருந்தும் இவற்றைவிடுத்துச்சமணமதத்தைப் பற்றிச் சில ஆண்டுகளை வீணாகக் கழித்தார். இன்றைக்கும் நாம் பார்க்கலாம், நம் நாட்டில் பிறந்தாலும் தாய்மொழியாம் தமிழைக் கற்காமல், அதில் பொதிந்திருக்கும் வாழ்க்கைக்கு உதவும் நல்ல நூல்களைப் படிக்காமல், தமிழே தெரிந்து கொள்ளாமல் ஆங்கிலம் மட்டுமே கற்பிக்கும் பள்ளிகளில் சேர்ந்து, நாட்டையும் மொழியையும் அறியாமல் தம் நாட்டிலேயே வேற்று நாட்டவரைப்போல வாழும் சிறார்களைப் பாருங்கள். அவர்களுக்காக நாம் பரிதாபப்பட வேண்டும். நல்ல பல நூல்கள் தமிழில் இருக்க, நீதி நூல்கள், மத நூல்கள் இவையெல்லாம் விடுத்து, பயனற்றவைகளை வாராவாரம், மாதாமாதம் விலைகொடுத்து வாங்கிப் படித்துத் தங்கள் மனத்தைப் பாழ்படுத்திக்கொள்ளும் மனிதர்களைப்பாருங்கள். இவர்கள்

---

* திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற மூவர் தேவார இசை விழாவின் இரண்டாம்நாள் தலைமை உரை.

எல்லாரும் களியிருப்பக் காய்கவர்ந்த பரிதாபத்திற்கு உரியதன்மைவர்கள். இவர்களுக்காக நாம் ஒவ்வொருநாளும் சில மணித்துளிகளை ஒதுக்கி-அவர்கள் மாசு இல் வீணையின் நாதம் போலவும், வீசுகின்ற தென்றல் போலவும் குளிர்ந்த அழகான கருத்துக்களையும் நல் வாழ்க்கை வாழ நம் தமிழில் பழம் நூல்களில் பொருந்தியிருக்கும் நல்ல கருத்துக்களையும் வந்து அள்ளி அள்ளிப் பருகிச் சுவைத்துப் பயனடைய - இந்த வழிதவறியவர்களை நல்வழிப்படுத்த நாம் விழைவோம். வாழ்க்கையில் அவர்கள் எவ்வளவோ நல்லவற்றை உணர்ந்து, அனுபவிக்காமல் நாட்களை வீணடிக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்துவோம். அவர்களைக் கண்டு கோபம் கொள்ளாமல் அவர்களுக்கு நல்வழி காட்டுவோம்.

தமிழ் இசை :

திருஞானசம்பந்தர் போலவே தாய்மொழியாம் செந்தமிழில் தணியாத காதலுடையவர் அப்பர்பெருமான். கெடிலநதிக்கரையில் திகழும் அட்ட வீரட்டானங்களில் ஒன்றான திருவதிகையில் அப்பர் பெருமான் பாடும் போது எம்பெருமானே உன்னை நீர், மலர், தூபம் கொண்டு வழிபடுவதை மறக்கமாட்டேன், அதனினும் மேலாகச் செந்தமிழ்ப் பண்ணுடன் தேவாரம் பாட மறக்கவே மாட்டேன் என்றல்லவா சொல்கிறார்.

" சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன். "

அரும் பொருள்களைச் சொல்கின்ற முறையில் அழகுபடவும், வரிசைப்படவும் சொல்வது அப்பருக்கே உரிய முத்திரை.

"இளங்குழந்தை முதலில் பழத்தை விரும்புகிறது. பல்முளைத்துச் சிறிது வளர்ந்தவுடன் கரும்பைக் கடித்துச் சுவைக்க எண்ணுகிறது. பிறகு வாலிபத்தில் மங்கையின்பத்தை விழைகிறது. அதற்குப்பிறகு பதவி ஆசை வந்துவிடுகிறது. இவை எல்லாம் இயற்கை; அதே சமயம் இனியன என்றாலும் அதனினும் மேலாக இனிமைக்கு இனிமையாக இருப்பவன் இடைமருதீசன் தான்" என்கிறார் அப்பர் பெருமான்.

" கனியினும், கட்டி பட்ட கரும்பினும்,
பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும்,
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதனே "

என்பது திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கேசுவரர் மீது திருநாவுக்கரசர் பாடிய அருமையான தேவாரம்.

ஆண்டவன் ஒருவனுக்குத்தான் அடிமை :

" நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே."

திருநாவுக்கரசர் சமண சமயம் விட்டுச் சைவசமயம் சேர்ந்து விட்டார் என்று அறிந்த பல்லவ அரசன் மகேந்திரவர்மன் கோபம் கொண்டு ஆட்களை அனுப்பித் திருநாவுக்கரசரை அழைத்துவரச் சொன்னான். நமது நாவுக்கரசர் அதற்கு அளித்த பதில் தான் முன் கூறிய பாடல்.

நாம் சிவபெருமான் ஒருவனுக்கே அடிமை. நாம் எந்த அரசனுக்கும் அடிமை அல்ல. நாம் அரசனுக்கு அஞ்சி ஏவல் புரிவது இல்லை.

உங்கள் அரசன் நமனை அஞ்சுவான். நாம் அந்த இயமனுக்கும் அஞ்சோம். ஏனெனில் நாம் சிவபெருமான் அடியினைப் பற்றி இருக்கிறோம். அவன் அடி சார்ந்திருப்பதால் தவறுகள் செய்வதில்லை. நாம் தூயவராகத் தூய வழியில் செல்வதால் நமனைக் கண்டு அஞ்சுவதில்லை.

இம்மையிலும், மறுமையிலும் எமக்கு நரக வேதனை இல்லை. நாம் சிவனையே நினைத்து ஆனந்தத்தில் திளைத்திருப்பதால் நமக்கு இம்மையில் துன்பம் இல்லை. மறுமையில் நாம் அவன் அடி சேரப் போவதால் நரகத்திற்கும் நமக்கும் சம்பந்தமில்லை,

நாம் பொய்யான வாழ்வு வாழ மாட்டோம். சிவனை நினைந்து வாழ்பவனுக்கு வாழ்வு உண்மையான வாழ்வு, அவன் வாழ்க்கை பொய்யல்ல. அவன் பொய் வாழ்க்கை வாழ மாட்டான், பலரையும் பார்க்கலாம். அவர்கள் தங்களைப் பற்றிச் சொல்வதற்கும் அவர் களின் உண்மைநிலைக்கும் எள்ளளவும் சம்பந்தமிருக்காது. எனக்குப் பெரிய மனிதர்களைத் தெரியும், நான் நினைத்தால் அரசிடம் இதைப் பெறுவேன் அதைப் பெறுவேன் என்பார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் செய்யக்கூடியது ஒன்றுமிருக்காது. வாயில்வந்ததைக் கொஞ்சம்கூடக் கூச்சமின்றிச் சொல்லித் திரிவார்கள். அவர்கள்

பாசத்தின் பிடியில் சிக்கியவர்கள். நாம் அவனடி பற்றி நிற்பதால் அவ்வாருன பொய் வாழ்வு வாழ வேண்டியதில்லை. அவ்வாறு வாழ மாட்டோம்.

நாம் பேரின்பத்தில் திளைத்துப் பெருமிதத்துடன் இருப்போம். இன்பத்தைத் துய்ப்பவன், துய்க்கும் இன்பத்தை விட ஒரு பெரிய இன்பத்தைத் தேடிக் கொண்டிருப்பான். ஒரு வகையான புகைச் சுருட்டுப் பிடிப்பவன் இதைவிட அதிக இன்பம் தரும் மற்றெரு வகைச் சுருட்டைத் தேடுவான். ஒருவகை பானம் அருந்துபவன் வெளிநாட்டைச் சேர்ந்த இன்னெரு வகை பானம் மேலும் இன்பம் தரும் என்று அதைப்பெறக் கனுக்காண்பான். இவற்றையெல்லாம் சுவைத்த பின் புதிய சுருட்டிலோ புதிய பானத்திலோ மிகப்பெரிய இன்பம் ஒன்றும் இல்லை என்பதை உணருவான். ஆனல் எவனெருவன் அவன் தாள் வணங்கி அதன் விளைவாகப் பேரின்பம் பெறுகிருனே அவன் அதன்பின் வேறு எந்த இன்பத்தையும் நாடமாட்டான். அந்த இன்பத்திலே திளைத்துப் போருள் பெற்றுப் பெருமிதத்துடன் வாழ்வான்.

நாம் பிணிகளாலே அல்லற்பட மாட்டோம். தம்மை அண்டியவர்க்கு நன்மையே செய்யும் சங்கரனிடம் நாம் சரணடைந்ததால் நம்மைப் பிணிகள் அல்லல்படுத்தா. அவன் பசிப்பிணி மருத்துவன். நோய் நொடிகளுக்கு அவன் வைத்தியன். நமக்குப் பசி வந்தால் அவன் உணவாவான். நமக்கு உடற்பிணி வந்தால் அவன் மருந்தாவான். அவன் அடியை நாம் பற்றியபின் நமக்குப் பிணி ஏது? நாம் நோயற்ற வாழ்வில் வாழ்வோம்.

நாம் ஒருவருக்கும் கீழ்ப்படோம். நமக்கு ஒருவரிடம் இருந்து ஒரு பொருள் வேண்டும் அல்லது பதவி வேண்டும் என்றல்தானே நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். நாம் வேண்டுவது ஒன்றுமில்லை. ஏனெனில் நமக்கு வேண்டுவன எல்லாம் அவன் கொடுப்பான். அவன் அருளாலே அளவிலா ஆற்றல் பெற்றிருப்பதால் ஒருவருக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை.

நாம் இன்பம் தவிரத் துன்பம் இன்னதென்று அறியாதபடி திருவடி நிழலில் அவனடி பிரியாதிருப்போம். சிவனுக்கு எக்காலத்திலும் மீளாத அடிமையாகி அவனது மலர் அடிகளை அடைந்து பற்றி இருப்பதால் அவனது பாதுகாப்பில் துன்பமின்றி வரம்பிலா இன்பம் துய்த்து வாழ்வோம்.

சிவன் எவருக்கும் அடிமையாகா இயல்பினன். தம்மை அடைந்தவர்க்கு நன்மையே செய்வான். அவன் நல்ல வெண்மைச்

சங்கினால் செய்யப்பட்ட அணியை ஒரு காதில் அணிந்திருக்கும் பெரும் தலைவன். அத்தகைய சிவனுக்கு மீளாத அடிமையாகி அவனது மலர்போன்ற இரண்டு திருவடிகளை நாம் அடைந்து விட்டோம். ஆகவே நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம், ஏமாப்போம், பிணியறியோம், பணியோம் அல்லோம், நமக்கு எந்நாளும் இன்பமே; துன்பம் இல்லை. அதாவது அவன் அடியைப் பற்றிக்கொண்டதால் அவன் (சிவன்) நம் துணை ஆகிறான். நம் துணையின் ஆற்றல் நமக்கும் கிடைக்கிறது. ஆகவே நாம் அவன் (சிவன்) குணங்களையும் ஆற்றலையும் பெற்றுப் பேரின்பத்தில் திளைத்துப் பெருமிதத்துடன் வாழ்வோம்.

துன்பம் வந்தால் அவன் அதைத் துடைப்பான் :

" மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

சமணர்கள் சொற்கேட்டுப் பல்லவ அரசன் நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் அடைக்கும் படி உத்தரவிட்டான். நாவுக்கரசர் நீற்றறையினுள் சென்றபோது திருவம்பலத்தில் தாண்டவம் ஆடும் சிவனது திருவடியின் நிழலையே தன் மனத்திற்கொண்டு சிவனடியார்க்குத் துன்பம் வருவதுண்டோ என்று எண்ணி அவனையே தொழுத வண்ணம் இருந்தார். சிவனது கருணையால் வெப்பம் நிறைந்த அந்தக் காளவாயே மிக்க இளவேனிற் காலத்தில் வீசும் தென்றலைப்போல, வண்டுகள் மொய்க்கும் குளிர்ந்த தாமரைத் தடாகம் போல, குளிர்ச்சியுடன் மாலை வெண்ணிலாவைப் போல, மாசில் வீணையின் ஒலிபோல இன்பம் தந்தது. ஆண்டவன் துன்பம் வரும்போது இன்பம் தருவான், வெப்பம் மிகுந்த இடத்தில் குளிர்ச்சியை வழங்குவான்.

நமக்கு எப்போதும் துணை நமச்சிவாயம் :

" சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச் சிவாயவே."

ஆன்மாக்களுக்கு உற்ற துணைவன் சிவன் எனும் அந்தணன். அவன் சோதியாக விளங்கும் தலைவன். அவன் திருவடிகளை நாம்

நாள்தோறும் வணங்குகிறோம். ஆகவே நம்மைக் கல்லோடு சேர்த்துக் கட்டி கடலிலே தள்ளினாலும் நமக்கு உற்ற துணையாக இருப்பது நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம் ஆகும்.

இது நமச்சிவாய பதிகத்தின் முதல் பாடல். இதன் கடைசி பாடல்,

"மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே."

பெண்மான் போன்ற உமாதேவியாரைத் தம் இடப்பக்கத்தில் கொண்டவன் சிவபெருமான். அவனது பூமாலை பொருந்திய திருவடிகளைக் கை கூப்பித் தொழும் பொருட்டு நமக்குக் கிடைத்திருப்பது நமச்சிவாயப் பதிகம் என்னும் பெயருடைய இத்திருப் பதிகம். இதனைப் பாடித் துதிக்கவல்லாருக்குத் துன்பமே இல்லை.

அஞ்சுவது எதுவும் இல்லை :

"கண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கட் சூளாமணியும்,
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்,
அண்ணல் அரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்,
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்.
அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை."

சிவனுடைய அடியார்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. வாழ்க்கையில் தினம் தினம் எது எதற்கோ பயப்படுகிறோம். தேர்வு எழுதிய பின் தேறுவோமோ இல்லையோ என்று பயம். வேலை தேடிப்போனால் வேலை கிடைக்குமோ என்று பயம். வேலையில் இருந்தால் பதவி உயர்வு பற்றிப் பயம். பயம் நம்மை ஆட்டுவிக்கிறது. அதைப் போக்க என்ன வழி? திருநீற்றுப் பூச்சும், சந்தனச் சாந்தும், தலையில் ஒளியுடன் விளங்கும் பிறைச் சந்திரனாகிய சூளாமணியும், புலித்தோல் உடையும், பவள நிறமும், வலிமை யுடைய வாகனமும், மார்பில் ஆபரணமாக விளங்கும் பாம்பும், கெடில்நதியையும் உடைய ஒப்பில்லாத சிவபெருமானின் அடியவர்கள் நாங்கள்; எனவே நாம் பயப்படும் படியாக உள்ளது எதுவும் இல்லை. இனி நாம் அஞ்சும்படி வருவதும் ஒன்றும் இல்லை.

(தொடரும்)

எது தவம்?

கருமுத்து. திரு. சு. சொக்கலிங்கம்
மதுரை.

தவத்தின் இலக்கணம் :

ஐம்புலன்களின் வழியே மனத்தைப் போகவிடாமல் கட்டுப்படுத்துதல் தவம் எனப்படும். தவம் என்ற சொல்லுக்கு "நான் என்ற உணர்வு நீக்கம்" எனப்பொருள் கொள்ளலாம். தம் உயிர்க்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வது, பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை ஆகியவற்றைத் தவத்தின் இலக்கணமாக வள்ளுவர் குறிப்பிடுவர்.

> "உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு"
>
> — திருக்குறள் - தவம்.

என அவர் எடுத்துரைப்பர்.

தவமும் பிறப்பும் :

தவம் முற்பிறவிப் பயனோடு தொடர்புடையது; மறுபிறவிக்கு வேண்டிய பயன்களை வேண்டியவாறு தருவது. கண்ணப்பநாயனார் ஒரு காளத்தி வேடர். அவர் ஒருநாள் காளத்தி மலையில் சிவலிங்கத்தைப் பார்க்கிறார். அது வெறும் சிலையாக அவர்க்குத் தோற்றமளிக்கவில்லை; அது இறைவனாகவே காட்சியளிக்கிறது. சிலையைப் பார்த்தவுடனே கண்ணப்பர் கட்டித் தழுவுகிறார்; தனியாக இருக்கிறாயே எனப் புலம்புகிறார்; பசியாக இருப்பாயே எனத் துடிக்கிறார். வேட்டைக்குச் சென்று இறைச்சி கொண்டுவந்து அவர்க்கு ஊட்டுகிறார்.

இந்த பக்குவநிலை அவர்க்கு எப்படி ஏற்பட்டது? முற்பிறப்பில் செய்த தவம் என்கிறார் சேக்கிழார்.

> "முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
> அன்பினை எடுத்துக் காட்ட"
>
> — பெரியபுராணம் - கண்ணப்ப நாயனார் புராணம்.

எனச் சேக்கிழார் முற்பிறவியோடு தவத்தினை இணைத்துப் பேசுகிறார்.

" யானேயோ தவம் செய்தேன் " — திருவாசகம்.

எனவும்,

" தவமே புரிந்திலன் " — திருவாசகம்.

எனவும் மாணிக்கவாசகர் மனம் நொந்து வருந்துவதைக் காண, அடியார்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்துவது தவம் என்பது புலனாகிறது.

கடும் தவம் தேவையா ?

கடும் தவத்தினைச் சைவம் ஆதரிக்கவில்லை. கடும் தவத்தின் மூலம் அடையும் பெருநிலையை, இல்லறத்தில் இருந்து கொண்டே இறை நினைவோடு எளிதில் அடையலாம் என்பது அவர்கள் கருத்தாகும். இதனைப் பட்டினத்தடிகள்,

" வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅ கல்லே போல்தின்
நலத்தின் வழாஅர் நின்நாமம் நவிற்றியோரே. "
— பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

என எடுத்துரைக்கிறார்.

பொய்த்தவம் :

உருவத்தால் தவசிவேடம் கொண்டு, உள்ளத்தால் வஞ்சமனம் கொண்டு பொய்த்தவம் புரிவோரும் உலகில் உள்ளனர். குற்றம் என அறிந்தும் அதனைச் செய்வோனது தவவேடத்தால் எந்தப் பலனும் இல்லை என்பது வள்ளுவர் கருத்து.

ஆதலின் உடையால் துறவியாகக் காட்டுவதில் பயன் இல்லை; மனத்தால், ஐம்புலன்களால், உணர்வால் ஒருவன் தூய்மை உடையவனாக இருத்தல் வேண்டும். அவனே உண்மையான தவசியாவான்.

உருவம் முக்கியம் இல்லை; உள்ளமே முக்கியம். வடிவால் அம்பு நேராக உள்ளது; ஆனால் செயலால் கொடியதாக உள்ளது. யாழ்

உருவத்தால்வளேந்துள்ளது; ஆனல் வினேயால் இன்பம்பயக்கிறது. உருவத்தைக் கண்டு அதன்பண்பை எடை போடக்கூடாது என்பது வள்ளுவர் கருத்து.

உலகம் பழித்ததை ஒழித்துவிட்டால் அதுவேபோதும். வேடங் கள் தேவையில்லே என திருவள்ளுவர் துறவிகளுக்கு அறிவுரை கூறுகிருர்.

“ மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் ”

— திருக்குறள் - கூடாஒழுக்கம்.

தவ ஆற்றலேத் தவருகப் பயன்படுத்தலாமா ?

தவத்திற்குப் பகையாக விளங்குவது ஆசை. கணத்தில் அழியும் சிற்றின்பங்களே நாடாத மனக்கட்டுப்பாடு தவசிகளுக்கு வேண்டும். அதனே விடுத்துத் தவ ஆற்றலேத் தவருகப் பயன்படுத்திஞல், அத் தவ வலிமையே அவர்கள் அழிவிற்குக் காரணமாகி விடும். இராவணன்,

“ முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னுள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக் கொடுத்த வரமும் ”

(கம்பராமாயணம் - யுத்தகாண்டம் இராவணன் வதைப்படலம்)

உடையவன். அதனேப் புல்லிய காமத்தின் பொருட்டுப் பாழ்படுத்தி விடுகிருன்.

“ காமம் இல்லே யெனில் கடுங்கேடு எனும்
நாமமும் இல்லே நரகமும் இல்லேயே ”

— கம்பராமாயணம்.

என்பதை உணர மறுத்து அவன் தவ ஆற்றலேத் தவருகப் பயன் படுத்தி, இறுதியில் காமம் காரணமாக அழிந்தே போகிருன்.

கந்தபுராணத்தில் சூரபன்மன் எல்ல உலகங்களேயும் ஆளக் கூடிய ஆட்சியைத் தவத்தின் ஆற்றலால் பெற்ருன். ஆனல் இறுதியில் ஆணவம் காரணமாக அழிந்து போகிருன்.

அதேபோல இரணியன் யாராலும் எந்தக் கருவியாலும், எந்த மனிதராலும், விலங்காலும், தேவராலும், காலை மாலை இரவு நேரங்களிலும் கொல்லப்படக்கூடாது எனத் தவம் செய்து வரம் பெறுகிறான். வரம் பெற்றபின் தான்தான் கடவுள், எல்லோரும் தன்னையே வழிபடவேண்டும் என இறுமாந்து நிற்கிறான். இறுதியில் அந்த இறுமாப்பு அவனை அழித்து விடுகிறது.

தவத்தின் பயனாக ஆற்றல் கிடைக்கலாம். அந்த ஆற்றல் வந்ததும் ஆணவம் வரக்கூடாது. தவம் மட்டும் போதாது; ஒழுக்கமும் வேண்டும். தவ வலிமை மட்டும் போதாது; ஆணவம் அழியவேண்டும். தீயில் போட்ட தங்கம் சுடச்சுட ஒளிறுவதுபோல, தவசிகள் எத்தனைய துன்பத்தை அடையநேர்ந்தாலும் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டே போகவேண்டும். நமக்கு யாரும் இல்லை; மனமே பகை. ஆதலின் "வெல்வது மனத்தை" என ஆன்றோர்கள் கூறினர்.

கடிதம்

M. R. Damodaran,
Assistant Executive Engineer (Retd)
Corporation of Madras.

12. Murugasa Mudaliar Road,
T. Nagar, Madras 600017.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பொன்னார் திருவடிகளுக்கு வணக்கம். தேர்தல் சிந்தனையும் பிரார்த்தனையும் என்ற தலையங்கம் ஞானசம்பந்தம் இதழில் படித்து மகிழ்ந்தேன். நாட்டின் நிலைமையை அறிந்து குறிப்பிட்டது வியக்கத்தக்கதாக இருக்கிறது. அதே போல் திருவாரூரில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் குருபூஜை ஆசியுரையும் வெகு சிறப்பாக இருக்கிறது. தத்துவக் கருத்துக்கள் மிக எளிய முறையில் அடியேனைப் போன்றவர்கள் புரிந்துகொள்ளும்படி வழங்கப் பட்டது. ஆதீன ஞானசம்பந்தம் நல்ல கருத்துக்கள் கொண்ட திங்கள் இதழாக வெளிவருவது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

தருமபுரம்.

(மலர் 49, இதழ் 1, பக்கம் 26 இன் தொடர்ச்சி)

உரைக்க முடியாத காமம் :

சொல்லிருந்தும் சொல்லும் விழைவு இருந்தும் சொல்ல முடியாத உணர்வொன்றிருக்குமென்றால் அது காமமாகத்தான் இருக்கும். கடலன்ன காமமானாலும் கரைகடவாதிருந்தால்தான் அது குலமகளிர்க்கழகாகும். களிகொள் காமத்திற் கையற வெய்து தலைமகளிர் இயல்பெனச் சிந்தாமணி குறிக்கிறது. அப்போது தூது போன்றவற்றால் அவர்கள் தம் உணர்வை வெளிப்படுத்துவர். அப்போது நாணமும் பெருமையும் சற்றே கீழ்ப்படவே செய்யும் என்கிறது சிந்தாமணி.

> நாணுந் தன்குல னுந்நலங் கீழ்ப்பட
> வீணைவித்தகற் காணிய-கிளியைத் தூதுவிட்டாள். (சிந். 1002)

அக்கிளி சொல்கிறது சீவகனிடத்தில்,

> கன்னிய குற்றநோய் கண்ணனார்க்குமஃது
> இன்னதென் றுரையலள் நாணி னுதலாள் (சிந். 1028)

இங்கும் நாணம் விடா நிலையே காட்டப்படுகிறது. கம்பர் மகளிரின் இவ்வியல்பை அப்படியே காட்டுகிறார் சூர்ப்பணகை இராமனிடம் வர - என்ன வேண்டும் என்று இராமன் கேட்க,

> தாமுறு காமத்தன்மை தாங்களே உரைப்பது என்பது
> ஆமெனல் ஆவதன்றால் அருங்குல மகளிர்க் கம்மா (கம். 2776)

சேடியைத் தூதுபோகச் சொல்லும் தலைவியின் நிலையில் நாணம் முழு ஆட்சி செய்கிறது.

> சொல்லுவான் உறும் உற நாணும் சொல்லலள்
> எல்லையில் பொழுதெலாம் இருந்து விம்மினாள். (கம். 1007)

என்று கம்பர் காட்டுகிறார்.

இரண்டுடலில் ஒருயிர் :

காதலின் மிகுந்த வேகம் இச்சொல்லாலேகூடத் தெரியவரும். உலகினர் கண்களுக்கு இரண்டு உடல்கள் தெரிந்தாலும் ஒருவர் உயிர் மற்றவர் உயிருடன் கலந்து ஒன்றாகிவிடும். இவ்வுண்மை ஊடல் நேரங்களில் அவர்கள் வாய்ச் சொல்லால் வெளிப்பட்டு விடும்,

சீவகனைக்காண காந்தர்வதத்தை வரும்போது குணமாலையின் ஓவியத்தை அவள் பார்த்துவிடுகிறாள். சீவகன் சமாதானம்கூறவும் அமையாது ஊடுகிறாள். அப்போது,

பாவைநீ புலவியி னீடல் பாவியேற்
காவியொன் றிரண்டுடம் பல்லது (சிந். 1017)

என்று தன் காதலை எடுத்துக்கூறி அவள்கோபத்தைத் தணிக்கிறான் கம்பர் இராமன் சீதை அன்பைச் சிந்தாமணி நடையிலேயே சொல்கிறார்.

மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினார். (கம். 517)

பனிக்குப் பகைமலர் :

கண், தாள் போன்ற உறுப்புக்களைத் தாமரை எனக் கூறுவதுண்டு. தாமரை சூரியனுக்கு நட்பு மலர். மதிக்குப் பகை.

சீவகனின் பாதங்கள் தாமரை போன்றன எனக் கூறவருகிற தேவர் 'பனிக்கதிர் பகைமலர்ப் பாதம்' (சிந். 1020) என்றார்.

கம்பரும் இதே உத்தியைப் பின்பற்றிச் சீதை காதல் வேதனையில் வருந்துவதைப் பனியால் வாடும் தாமரைக் குளமென இருந்தாள் என்பர்.

பனிப் புயற்குத் தேம்பிய தாளதாமரைமலர்
ததைந்த பொய்கை. (கம்- 526)

ஒத்தனள்.

ஊமையின் உணர்வு :

செவி கேளாததால் வாயாலும் பேச முடியாமல் போகும் இவர்கள் கைகளால் சொல்லிக் கண்களால் கேட்பார்கள். காதல் நிலையும் இப்படித்தான். எண்ணியதைச் சொல்லமுடியாது. ஆசையால் அவதியுறும் குணமாலை, சிந்தாமணியில்,

கையினுற் சொலக் கண்களிற் கேட்டிடும்
மெய்சொல் சிந்தையின் மூங்கையு மாயினேன் (சிந். 997)

என்கிருள். கம்பர் சீதையின் காதல் வேதனையுங்கூட ஊமையை ஒத்தே உள்ளது என்கிருர்.

நோம், உறும்நோய் நிலை நுவல கிற்றிலள்
ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள். (கம். 521)

அமிர்தத்தால் செய்த அணங்கு:

பெண்ணின் தோள் தொடுந்தோறும் உயிரைத் தளிர்க்கச் செய்வதால், அது அமிர்தத்தால் அமைந்ததேயென்பான்வள்ளுவத் தலைவன். அப்படி வருணிக்கும் இலக்கிய மரபைத் தேவரும் பின் பற்றுகிருர். குணமாலையை,

மருந்தின் சாயல் மணங்கமழ் மேனியாள். (சிந்.1033)

(மருந்து - அமிர்தம்.) என்று வருணித்தார். கம்பர் சீதையின் மேனி அமிர்தத்தால் செய்யப்பட்டது என்றதுடன் மன்மதனே அவ் ஓவியத்தை வரைந்தான் என்றும் சிந்தாமணிக் கருத்திற்கு மெருகு கூட்டினர்.

தேவு தெண்கடல் அமிர்து கொண் டனங்கவேள்
செய்த ஓவியம். (கம். 5079)

கூடலிழைக்கும் காரிகை :

காதல் வசப்பட்டோர் காதலன் பிரிவைத் தாங்கிக்கொள்ள மாட்டாமல், சகுனம், சங்கேதம் போன்ற குறிகள் மூலம் காதலன் வருகையைத் தெரிந்து கொள்வார்கள். அக்குறிகளிலொன்று கூடலிழைத்தல். மணலில் மண்டியிட்டமர்ந்து கண்மூடி இருவிரல்களை இணைத்துவைத்துப் பின் எதிரெதிர் திசைகளில் மேலிருந்து கீழாகக் கோடுகிழிக்கும் முயற்சியில் அவ்விரல்கள் இணையுமாளுல் காதலன் வருவான் என்பதும் - இணையாது போளுல் வாரான் என்பதும் அவர்கள் நம்பிக்கை. சிந்தாமணியில் குணமாலை கூடலிழைக்கிருள்.

சென்ருர் வரைய கருமஞ் செருவேலான்
பொன்னுங் கணியகலம் புல்லப் பொருந்துமேல்
குன்ருது கூடுகெனக் கூறிமுத்த வார்மணல் மேல்
அன்ருங் கணியிழையா ளாழி யிழைத்தாளே. (சிந். 1037)

கம்பர் இக்கூடலிழைத்தலைத் தன் காவியத்தில் காட்டுகிறார். சீதையின் திருமணத்திற்காகச் செல்லும் காரிகையர் சோலையில் தங்கி மகிழும்போது ஒருத்தி கூடலிழைத்துப் பார்க்கிறாள்.

குழைத்த பூங்கொம்பு வினவு ஒருத்தி கூடலை
இழைத்தனள் அது அவள் இட்டபோ தெலாம்
பிழைத்தலும் அனங்கவேள் பிழைப்பில் அம்பொடும்
உழைத்தனள் உயிர்த்தனள் உயிர் உண்டு என்னவே

(கம். 994)

கூடலிழைக்கும் காரிகையின் எதிர்பார்ப்புக் கம்பர் காவியத்திலும் அப்படியே இருக்கிறது.

(வளரும்)

பார்வையாளர் குறிப்பு (நகல்)

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

வைத்தீசுவரன்கோயில்

அருள்மிகு வைத்தீசுவரனை வழிபாடு செய்யும் பெரும்பேறு கிடைக்கப் பெற்றது, மனத்திற்குப் பெருமகிழ்வையும், நிறைவையும் தருகின்றது. இப்பிரசித்தி பெற்ற வரலாற்றுப் புகழ்கொண்ட இக்கோயிலில் இறைவனைவழிபடக் கொடுத்து வைத்திருக்கவேண்டும். மனநிறைவோடு இறைவனைக் காண உதவிய கோவில் அலுவலர்கள் அனைவரையும் குறிப்பாக எனது நண்பர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஆற்றும் சீரிய தொண்டினையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். கோயில் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருந்து, வரும் பக்தர்களை நன்கு பேணி, அவர்கள் மனத் திருப்தியோடு தரிசனம் செய்து பாராட்டும் வகையில் அவர்கள் தங்கள் தொண்டினைச் சிறப்பாகச் செய்து பணியாற்றுகிறார்கள். எல்லாம் வல்ல இறைவன் இத்தொண்டர்கள் குடும்பம் சீரும் சிறப்பும் பல் வளமும் பெற்று நீடுழி வாழ இறைவன் அருள் புரிவாராக.

(ஒ-ம்) V. பழநிவேலாயுதம்,
தலைமைப் பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம், திருச்சி-17

17—10—89.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

இறைவன் பல்வேறு பேதவடிவங்கள் எடுத்தலினால் விகாரம் அடைவானோ என்று ஐயுற்றமைக்கு விடையினைச் சென்ற பாடலில் கூறினார். மேலும் அக்கருத்தையே விளக்குவாராக அருள்நந்தி சிவாசாரியார் ஓர் உவமையினைக்கொண்டு நிறுவுகின்றார். பளிங்கின் நிறம் வெண்மை. ஆனால் நீலம், பொன்மை முதலியன நிறங்களை அப்பளிங்குப் பொருந்தியவிடத்து அவ்வந்நிறங்களாய்த் தோன்றுகிறது. எனினும் அப்பளிங்கு தன் வெண்மை நிறத்தை விட்டுவிட்டது என்றோ, அவ்வந்நிறமாக மாறிவிட்டது என்றோ கூற இயலாது. அதுபோலவே இறைவனும் சக்தியினுடைய பேதங்களெல்லாமாகத் தான் தோன்றி நிற்பானேயன்றித் தன் நிலையில் மாறினான் என்றோ விகாரம் அடைந்துவிட்டான் என்றோ கூற முடியாது என்கிறார். இக்கருத்துக்களை,

'பொன்மை நீலாதி வன்னம் பொருந்திடப் பளிங்கு அவற்றின்
தன்மையாய் நிற்குமா போல் சத்திதன் பேதமெல்லாம்
நின்மலன் தானாத் தோன்றி நிலைமையொன்றாயே நிற்பன்
முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்கும் தான் முனையானன்றே''

என்னும் பாடல் நன்கு விளக்குகிறது. ஈண்டுப்பளிங்கு சிவத்திற்கும் நீலம், பொன்மை ஆகிய நிறங்கள் கிரியாசத்தி, ஞானசத்தி ஆகியவற்றிற்கும் உவமைகளாம். எனவே பரமசிவன் ஞானசத்தி, கிரியா சத்திகளைப்பொருந்தி அவ்வச்சத்திகளின் பேதம் தானாகத் தோன்றி நிற்பினும் தமது தன்மையில் வேற்றுமையின்றி நிற்பர் என்பது கருத்தாகும்.

அடுத்து ஒரு கேள்வி எழுகிறது. இங்ஙனம் இறைவன் தானும் சத்தியுமாய் இருந்து அருளுவது ஏன்? என்பது அது. இதற்குரிய விடையினை ஆசிரியர் கூறுகிறார். இறைவன், சிவமும் சத்தியுமாய் இருத்தலினால்தான், இவ்வுலகமெல்லாம் ஆணும் பெண்ணுமாகவும் குணமும் குணியாகவும் விளங்குகின்றன. இங்ஙனம் உயிர்களுக்கு இருவேறு வகைப்பட்ட வடிவ அமைப்புடன் கூடிய வாழ்வுக

னெல்லாம் சிவசத்தி வடிவானதால்வந்த வாழ்வாகும். இக்கருணையை உணராதார், பீடமும் இலிங்கமும் சத்தியும் சிவமுமாய் நின்ற தன்மையும் உணராதாராயிருக்கின்றனர். இக்கருத்துக்கள்,

"சத்தியும் சிவமுமாய தன்மையின் உலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குணம் குணியுமாக
வைத்தனன் அவனால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்
இத்தையும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்"

என்னும் பாடலில் விளக்கப்படுகின்றன. பீடம்-இலிங்கம் இருக்கும் ஆசனம்; பீடலிங்கத்திலே பீடம் சத்தியும் இலிங்கம் சிவமுமாயிருக்கும். இலிங்கம் ஞானசத்தி வடிவமும் பீடம் கிரியாசத்தி வடிவமும் ஆகும். இலிங்கம் நாதரூபமும் பீடம் விந்துரூபமுமாம்.

'லிங்கம்' என்னும் சொல்லில் 'லிங்' என்பது லயம் என்னும் பொருளையும் 'கம்' என்பது தோற்றம் என்னும் பொருளையும் தரும் என்பர். எனவே லிங்கம் என்பது படைத்தல் காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்தரிப்பதாகிய இறைவனுடைய பிரபாவம் என்பர். இவற்றையெல்லாம் உரைத்திருக்கின்றனர் என்பதுபாடல் கருத்து.

இனி, நிறைவாக, ஆசிரியர் அருள்நந்திசிவாசாரியார் முதல் சூத்திரத்தை நிறைவிக்கும் நிலையில இறைவனின் இலக்கணத்தைக் கூறுகிறார். இறைவன், உயிர்களின் பொருட்டுத் தடத்த வடிவம் கொண்டானாயினும் உண்மையில் அவன் அருவும் உருவும் அருவுருவும் அல்லாதவன்; சித்தாகிய சத்திவடிவமும் அசித்தாகிய அத்துவாவடிவ மந்திர வடிவங்களும் அல்லாதவன்; சதசத்தாயினனாய் நின்று படைத்தல் முதலிய தொழில்கள் ஒன்றும் செய்பவனும் அல்லாதவன்; உயிர்களுக்குப் புத்தி முத்திகளைக் கொடுக்கும் பொருட்டுத் தவம் முதலாக போக யோகவடிவங்களைக் கொள்பவனும் அல்லாதவன்; தானே தடத்த இலக்கணம் முதலிய இவையெல்லாம் உளவாகப் பொருந்தி நிற்பினும் இவற்றில் ஒன்றையும் பொருந்தாத தடத்த வடிவினன் ஆவான்.

"சிவனரு வுருவமல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன்;
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானுமல்லன்;
தவமுதல் யோக போகம் தரிப்பவன் அல்லன்; தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே"

என்பது அக்கருத்துக்கள் அமைந்த பாடல். இப்பாடலால், பல்வேறு தடத்த வடிவங்களை இறைவன் உயிர்கள் பொருட்டு

ஏற்பினும் அவை எதுவும் அவ்விறைவனின் உண்மை வடிவங்களி அல்ல; இவற்றிற்கு அப்பால் சுத்த வடிவினனுமிருக்கிருன் அவன் என்னும் கருத்தை ஆசிரியர் நிறுவுகின்ருர்.

இதுவரை, சிவஞான போதம், சிவஞானசித்தியார் எனும் இருநூல்களின் முதல் நூற்பா மற்றும் பாடல்களைக் கொண்டு இறைவனின் உண்மை, ஒருவாறு விளக்கப்பெற்றது. (தொடரும்)

கடிதம்

திரு. தா. குருசாமி
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம்
397 வடக்குமாசி வீதி

மதுரை,
12—12—1989.

முதல் ஞாயிறு தரிசனத்தில் பெற்ற உபதேச ஆய்வுச் செய்திகள் நினைக்க நினைக்கப் புத்தின்பம் விளைக்கின்றன.

குப்பைக் கார்த்திகை - பாஞ்சராத்திரதீபம் - அயன் அரிக் குறித்திடா வழக்கைத்தகுதி நோக்கி முடிபச் செய்த உரைப்பகுதி இங்குதத்துவத்துறை அறிஞர்களிடம்கூறி வியப்பைவிளைவித்தேன். 'போகமார்த்த பூண்முலையாள்' திருப்பதிகம் போக, யோக, வேக வடிவமாமாற்றை முழுதும் அன்று விளக்கியதால் மடமை நீங்கியது.

'திருப்பாசுரம்' பத்துதான் என்பதும், மீதி இரண்டு பாடலும் கணக்கில் எடுபடாமை சுட்டிய பகுதியும், இரண்டு அந்தமாகப் பாடிவருவதை ஓரேகட்டளையாய் ஓதிக்காட்டிய ஆய்வும், உள்ளத்தைப் பிணித்தது. இப்படியே திருவடி நீழலில் இருந்து திருமுறை ஆய்வைத் தொடர்ந்து கேட்கவும், தொகுக்கவும், அதனுல் தமிழுலகு பயன் பெறவும் முதல் ஞாயிறு உதவுவதை நினைந்து வணங்குகிறேன்.

உபதேசத்தொடர்பில் நான்கு பதிகம் இன்றியாமையாதன - என்று உத்திரவாகியது. திருப்பாசுரம், மட்டுமே அவற்றில் ஒன்ருகக் குறிப்பு அருளியது ஏனைமூன்று குறிப்பறிந்து பெறுவேன் என வணங்குகின்றேன்.

'கறைக்கண்டன் கழலடியே காப்பு' - கோவையின் தத்துவப் பொருள் - எடுத்துக்காட்டுத் தந்து விளக்கியமை - காரி நாயனுர்-கற்றளி கட்டியது மூவர் முதலிகட்கு முந்தி என்று முடிவு காட்டியது - போன்ற தொடர்பான ஆய்வுச்செய்திகள் எளியேம் வாழ்விற்கு உறுதி பயப்பன என்று வணங்கி மகிழ்கின்றேன்.

காரியார், நெடுமாறர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 3—12—89 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தமிழ்மணம் கமழ்வது தருமைப்பதி. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் தமிழையும், சைவத்தையும் வளர்த்த அருளாளர்கள். தமிழில் நூல்களை அருளியும் புலவர்களை ஆதரித்தும் விளக்கவுரைகள் செய்தும், நூல்களைப் பதிப்பித்தும் ஆதீனம் ஆற்றிவரும் தொண்டுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. ஆதீன அருளாட்சி செய்துவரும் குருமணிகளின் தமிழ்ப்புலமை, அவர்களின் தோத்திர உரை விளக்கங்கள் முதலிய எண்ணில்லாத சிறப்புக்களை எண்ணியவாறே திருமடம் சேர்ந்தேன். காலை மணி 10-00.

பூசை நிறைந்து, பாராயணமும் ஆகியிருந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சித்திராசனத்தில் எழுந்தருளியிருந்தார்கள். திருநீறு பெற்று அணிந்து அன்பர்கள் அமர்ந்தனர். திருமுறைப்பாராயணத்துடன் கூட்டம் தொடங்கிற்று.

"கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்" என்பது சுந்தரர் திருவாக்கு. 'கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த' என்ற அடைமொழியைக் காரிக்கும் என்பதனோடும் கூட்டிக் காரிநாயனார் சிறப்புணர்த்தி உபதேசம் தொடங்கினார்கள்.

காரிநாயனார் திருக்கடவூரில் அவதரித்தவர். இவர்அவதரித்த குலம் பற்றி வகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதியிலும், பெரியபுராணத்திலும் குறிப்பு இல்லை. சேக்கிழார் குங்குலியக்கலய நாயனார் வரலாற்றில் " ஏய்ந்த சீர் மறையோர் வாழும் எயிற்பதி " என்றும் இக்காரிநாயனார் வரலாற்றில் "மறையாளர் திருக்கடவூர்" என்றும் தலக்குறிப்பாக விதந்து அருளிச்செய்கிறார் - இவற்றை உன்னிநோக்கும்போது காரியாரும் மறையவர் ஆகலாம் எனக் கருதத்தோன்றுகிறது. இங்ஙனம் விளக்கி இடையே 'மறையாளர்'

என்ற சொல்லுக்குச் சீரிய விளக்கம் அருளினார்கள் - மறையை - ஆள்வோர் என இரண்டன்தொகையாகவும் மறையால் ஆள்வோர் - என மூன்றன் தொகையாகவும் பொருள் கொள்ளலாம் என்பது அக்குறிப்பு. தொடர்ந்து காரிநாயனார் வரலாற்றைச் சுருக்கமாக அருளிச் சில ஆய்வுக் குறிப்புக்களை நல்கினார்கள்.

காரியார் வண் தமிழ் நூல்களின் துறைஅறிவு மிக்கவர். தமிழ்ப்புலமை சான்றவர். அகத்துறை பொருந்தத் தம்பெயரால் ஒருகோவை நூல் இயற்றினார். இந்நூல் காரிக்கோவை என்பர். காரிக்கோவை பாடி தமிழ்வல்ல மூவேந்தரிடமும் சென்று தம் தமிழ்ப்புலமை நலம்தோன்ற விளக்கியவர். சொற்றாள் விளக்கமாகி உள்ளுறைப் பொருளாகிய வீடுபேறு வெளித் தோன்றுமல் பொருள் மறைந்து கிடக்கும்படி அமைந்த நூல் காரிக்கோவை. மூவேந்தரிடம் இதன் சிறப்பை விளக்கி, உரைநயம் பெறக் கூறிப் பெருஞ்செல்வக் குவியல் பெற்றார்.

பெற்ற பெருஞ்செல்வத்தைக் கொண்டு இவர் சிவபெருமான் எழுந்தருளும் திருக்கோயில்கள் பலவற்றைக் கட்டினார். இன்சொல் இயம்பினார்; சிவனடியார்க்குப் பெருநிதியம் அளித்தார். இறைவன் திருக்கயிலாய மலையை எக்காலத்திலும் மறவாத சிந்தையினராக விளங்கினார் - தம் மனம்போலவே தன் உடம்புடன் திருக்கயிலாயம் சேர்ந்தார்.

குருமணிகள் வரலாற்றின் இடையிடையே விளக்கங்களை அருளினார்கள். அகப்பொருள் - தமிழில் இல்லற வாழ்வை வரலாற்று முறையில் விளக்கும் நூல்-வரன் முறையாக நிகழ்வுகள் அமைக்கப்பட்டிருக்கும் சிறப்பினது. அகப்பொருள் நூல்களுள் கோவை நூல்கள் சிறப்பானவை. மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற்றம்பலக்கோவையார் என்றும் திருக்கோவையார் என்றும் வழங்கப்பெறும், கோவை நூல் தமிழில் அமைந்த, இன்று கிடைத்துள்ள கோவை நூல்களுள் பழமையானது. பாண்டிக்கோவை என்றொரு நூலும் பழைமையானது என்பர் ஆய்வாளர். திருக்கோவையார் பழமையும் தெய்விகநலமும் சான்றநூல். அகத்துறை இசால் அளவில் உலகியலின்பம் தெரியும். நுனித்து நோக்கினால் உள்ளுறையும் பொருள் தெய்விக நெறி சாற்றுவதாக அமையும். இப்படிப்பட்ட நிலையில்-திருக்கோவையார் போலவே அமைந்தது காரிக்கோவை எனலாம். காரிக்கோவை பற்றி யாதும் ஒன்றும் விபரம் அறியக் கூடவில்லை; நூல் மறைந்தது என நூல் பற்றி அருளினார்கள்.

பொதுவாகப் பாடலுக்கு பொருள் கூறுவது இருவகையாக அமையும். ஒன்று வெளிப்படையான பொருள் - சொற்பொருள்

கூறுவது. அடுத்தது அச்சொற்பொருள் வாயிலாக உணரக்கிடக்கும் கருத்துநலம் - உள்ளுறைப்பொருள் கூறுவது. எடுத்துக்காட்டாகத் "தோடுடைய செவியன்" என்னும் முதல் தேவாரப் பாடலுக்குத் 'தோடு அணிந்த செவியினன்' - என்று இவ்வாறு பொருள்கூறுவது முதல்வகை. "தோடும் குழையும்" அணிந்த பெருமானின் சிறப்பைத் திருவாசகவழிச் சிந்தித்துத் தோடுடைய செவியன் என்பது அம்மையப்பர் திருக்கோலம் என உரைவளம் காண்பது பொருள் தெரியும் வகையில் சிந்தித்தல்-இதில் இறைவன் அம்மையப்பராய் ஐந்தொழில் செய்தல் மறைந்திருக்கிறது. அகப்பொருள் வெளிப்பட்டிருக்கிறது. திருச்சிற்றம்பலக்கோவையாரில், பாங்கன் வினுதல் என்னும் துறைபொருந்தப்பாடிய,

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு
என்கொலாம் புகுந்து எய்தியதே"

என்னும் திருப்பாடலை நினைவு படுத்தி, பாங்கன் தலைவனின் மெலிவுக்குக்காரணம் வினவும் இப்பாடல் அகப்பொருட் செய்தியை உள்ளுறையாகவும், அருளியல் கருத்தை வெளிப்படையாகவும் வைத்து அருளியுள்ள மணிவாசகர் மாண்பினை உளங்கொள அருளிச் செய்தார்கள்.

தொடர்ந்து, கோவைபாடிப் பொருள் விளக்கி மூவேந்தர்பால் பெற்ற நிதி கொண்டு இறைவனுக்குத் திருக்கோயில் அமைத்த காரியார் திருத்தொண்டின் சிறப்பை விதந்து, மன்னர்கள் பலதளிகள் அமைத்தது போல அடியார்கள் அரசர்கட்கு முன்பே திருக்கோயில் கட்டிய மாண்பைச் சுட்டினார்கள். காரியார் திருக்கயிலை மறவாத சிந்தையராய் இருந்தமையைச் சுட்டி, மனம்போலவே உடலுடன் கயிலை சார்ந்தமையைச் சுந்தரர் கயிலை சேர்ந்தது போன்ற நிலை இது என விளக்கினார்கள்.

இங்ஙனம், காரியார் வரலாறு விரித்தருளி நின்றசீர்நெடுமாற நாயனார் புராண வரலாற்றையும் சுருக்கமாகத் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

" நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன் "

என்பது திருத்தொண்டத்தொகை. நிறைக்கொண்ட சிந்தை என்பது எது? சாதாரண மனிதமனம் குறைக்கொண்ட சிந்தை உடையது. இறைவன் குறைவிலா நிறைவு. குறைவிலா நிறைவை நினைந்து நிறைவது நிறைக்கொண்ட சிந்தை. ஞானசம்பந்தரால் நிறைக்கொண்ட சிந்தையினர் ஆனார் நெடுமாறர். பெற்றதைக் கொண்டு பெருதலின் மேல் மென்மேலும் எழும் அவாவுடையோர் குறைக்கொண்ட சிந்தையாளர். இந்நிலை நெடுமாறனார்க்கு சமண சமயத்தில் இருந்தபோது இருந்திருக்கிறது. திருஞான சம்பந்தரால் மாறி தாம்பெற்ற செல்வமே, இன்பமே நிறைவானது என்ற நிறையுள்ளம் பெற்றார். இக்கருத்துப் பற்றியே கற்பை நிறை என்றனர். கணவன் மனைவி வாழ்வில் கிடைக்கும் இன்ப நலங்களை நிறைவாகக் கொண்டால்தான் வாழ்வு சோபிக்கும், குறைகண்டால் வாழ்வு பாலைவனமாகிவிடும் என்று இல்லற வாழ்வின் குறை நிறைகளையும் விளக்கி புராணத்தைத் தொடர்ந்தார்கள்.

நெடுமாறர் சிறப்புக்களை இருவகைப்படுத்தி விளக்கம் அருளினார்கள். ஒன்று ஆன்மீகச்சிறப்பு. மற்றொன்று அரசியல்சிறப்பு. ஞானசம்பந்தரால் ஆட்கொள்ளப் பெற்றுச் சைவசமயம் திரும்பியது ஆன்மீகச் சிறப்பு. நெல்வேலி வென்றது அரசியல்சிறப்பு. இங்ஙனம் வகைப்படுத்திய குருமணிகள் அவ்வவ் வகையில் நெடுமாறர் புராணத்தை விரித்தார்கள்.

நெடுமாறர் தடுமாறும் நெறியாகிய சமண சமயம் சார்ந்தார். ஞானசம்பந்தர் அருளால் சைவநெறி சேர்ந்து உய்ந்தார். இதனைச் சேக்கிழார்,

" தடுமாறும் நெறியதனைத் தவமென்று தம்உடலை
அடுமாறு செய்து ஒழுகும் அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் வினைமாறும் கழல்அடைந்த
நெடுமாறனார்பெருமை உலகேழும் நிகழ்ந்ததால் "

என விரித்தருளினார். ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சமணநெறி தடுமாறும் நெறி என்பதைப் பலபட விளக்கம் செய்தருளினார்கள். அத்தி-நாத்தி என்ற நிலை சமணர் தடுமாற்ற நெறி. திருநாவுக்கரசர், "தவமே என்று அவம் செய்யும் சமண்" நெறியைக் குறித்துக் காட்டியுள்ளார், மகளிரும் நீராடா நெறி நின்றனர் என்றுவிளக்கம் அருளினார்கள் திருநாவுக்கரசர் புராணத்தில் சேக்கிழார் நாவுக்கரசர்

அமண் சமயம் புகுந்த நிலையை விளக்கும், "நில்லாத உலகியல்பு கண்டு நிலையா வாழ்க்கை அல்லேன் என்று அறத்துறந்து, ... நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால், கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார்" என்னும் பாடல் கருத்தோடு ஒப்பிட்டு அமண் சமயநெறி தடுமாறும் நெறி என திருவியருளினார்கள்.

சைவசமயம் விரதங்களின் சிறப்பைஉணர்ந்து மேற்கொள்ளும் நெறி. அதே சமயம் உடல் நலம் பேணும் உயர்நெறி. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்; திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்" என்னும் கொள்கையை உடைய நன்னெறி; நம் சமய நெறி-தடுமாற்றம் இல்லாத நெறி-இங்ஙனம் விளக்கம் செய்தருளி நெடுமாறர் புராணம் தொடர்ந்தார்கள். ஞானசம்பந்தர் நெடுமாறர் அருளால் சைவம் தழுவினார். தென்னாடு (பாண்டிய நாடு) சிவம் பெருகச் செங்கோல் உய்த்து அறமளித்தார். சொல்நாம நெறியாகிய திருஐந்தெழுத்தின் நெறிபோற்றினார். - இவ்வளவில் ஞானசம்பந்தரால் ஆட்கொள்ளப் பெற்ற சிறப்பைச் சேக்கிழார் நெடுமாறர் புராணத்தில் எடுத்துக் காட்டினார். ஞானசம்பந்தர் நெடுமாற பாண்டியனை ஆட்கொண்ட வரலாறு திருஞானசம்பந்தர் புராணத்தில் விரிவாகக் கூறியுள்ளமையால் அவற்றை மீண்டும் கூறாதுவிடுத்தார் எனப் புராணச் சிறப்பையும் புலப்படுத்தினார்கள்.

அடுத்து நெடுமாறநாயனாரின் அரசியல் சிறப்பு நெல்வேலிப் போர். வடநாட்டுப்பகை அரசரோடு நெல்வேலியில் போரிட்டார். இது பற்றிய வருணனை 4 பாடல்களில் காணப் பெறுகின்றது. வெற்றி கொண்ட நெடுமாறன் பாண்டியர்க்குரிய வேம்பு மாலையுடன் வாகை சூடினார். சோழ மன்னரின் திருமகளாராகிய மங்கையர்க்கரசியார் சைவநெறி மேற்கொண்ட கணவனுருடன் சிவத்தொண்டுகள் புரியலானார். பின்னர்ச் சிவலோக பதவி எய்தினார். சேக்கிழார்,

"திரைசெய்கடல் உலகின்கண் திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய்பெரும் புகழ்விளங்கி ஓங்குநெடு மாறனார்
அரசுரிமை நெடுங்காலம் அளித்திறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத்து இன்புற்றுப் பணிந்திருந்தார்."

என, ஞானசம்பந்தர் அருள்பெற்ற நெடுமாறர் சாலோக பதவி அடைந்தமையை அருளிச் செய்து புராண நிறைவு செய்துள்ளார்.

நிறைவாக மாதச் சிறப்புத் திருநாட்கள் பற்றிய விளக்கங்களை அருளினார்கள். புராண வரலாற்றுடன் சாத்திர தோத்திரக் கருத்துக்களை மேற்கோள் காட்டித் திட்ப நுட்பம் செறிய அமைந்த

அருளுபதேசம் நிறைந்தது. பண்டாரக் கட்டின் வசதிற்புறத்தில் இன்சுவைத் தேநீர் அன்பர்கட்கு வழங்கப்பட்டது. தத்துவக் கருத்துக்களை ஏந்திய இனிய உள்ளங்களோடு இல்லம் அடைந்தோம்.

தொண்டர்தம் வாழ்வியலால் தூயமனம் பெறுவித்தே
அண்டமெலாம் வாழ்விக்கும் அருட்குருவின் தாள்போற்றி !

வாழ்க குருமணிகள் !

அட்டைப்பட விளக்கம்

வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

ஒவ்வொரு திங்களிலும், கார்த்திகைத் திருநாளில் முருகப் பெருமான் எழுந்தருளி வருவதும், அம்மையப்பரிடம் விடை பெறுவதும், அபிடேக மண்டபத்தில் அபிடேகங்கொண்டருளி ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு அருள்பாலிப்பதும் மெய்சிலிர்க்க வைக்கும் காட்சிகளாகும். வேண்டுவார்க்கு வேண்டுவன விரைந்தீயும் ஸ்ரீசெல்வமுத்துக்குமாரப்பெருமானுக்கு எல்லா நாட்களும் உகந்த நாட்களே எனினும் தைச்செவ்வாய் மிகச் சிறந்த திருநாளாகக் கொண்டாடப்பெறும்.

வைத்தீசுவரன்கோயில் அங்காரகனுக்குரிய (செவ்வாய்) தலமாகும். அங்காரகன் இத்தலத்தில் இறைவனை வழிபட்டுத் தனக்குரியசெங்குட்டநோய் நீங்கப்பெற்றான் என்பதுதலவரலாறு. செவ்வாய் உயிர்களுக்கு வெப்பம் தருபவன். வெப்பம் பலவித நோய்களுக்குக் காரணமாக இருப்பதை அனைவரும் அறிவர். நோய்களைக் கொடுப்பவனுக்கே (ரோககாரகனுக்கே) நோய் நீங்கப் பெற்ற தலம் என்பது இத்தலத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும். பூமிகாரகன் (பூமிக்கு உரியவன்) எனப்படும் செவ்வாய்க்கு, பூமியன்னை தம்மக்களுக்குப் புதுவருவாய்களைப் பொலிவோடுவழங்கும் தைமாதம், ஆதிக்க (உச்சம்) மாதமாகும். முருகப்பெருமான், செவ்வாய்க்கு அதிதேவதையாக விளங்கும் சிறப்புடையவர். எனவேதான் தைச்செவ்வாய்த் திருநாள்முருகப் பெருமானுக்குஉகந்த திருநாளாகத்திகழ்கிறது. தைச்செவ்வாய்த் திருநாட்களில் முருகப்பெருமானை வழிபடுவோர் செவ்வாயின் பிடிப்பிலிருந்து (செவ்வாய் தோஷத்திலிருந்து) விடுபட்டு இம்மை மறுமை இன்பங்கள் எய்துவர்.

இத்தகு திருநாள், நிகழும் சுக்கிலஆண்டு தைத்திங்கள்15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமைதொடங்கி24ஆம் நாள்செவ்வாய்க்கிழமை முடிய (28—1—90 முதல் 6—2—90 முடிய) உள்ள பத்துநாட்களும் கொண்டாடப்பெறுகின்றது.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சுக்கில - மார்கழி ஆயில்ய வழிபாடு 17—12—89 ஞாயிற்றுக்கிழமையன்று புதுக்குடி, அருள்மிகு சுவேதாரண்யேசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நிகழ்ந்தது. இத்தலம் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்றது. இத்தலத்தின் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., உரை நிகழ்த்தினர். "மாகுடி, மாட்டூர், கூந்தலூர், புதுக்குடி, தக்களூர் தேவாரப் பாடல்களும் தலச் சிறப்புகளும்" என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 102 ஆவது அருளுபதேசம் 7— —90 அன்று மாலை 7 மணியளவில் தொடங்கித் திருமுறைப் பாராயணம் முதலிய அங்கங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. முதற்கண் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., பிஎச். டி., இலக்கணவழிச் சமயச் சிந்தனை வழங்கினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் திருத்தொண்டர் புராணத்தினை விரித்துக் கூறும் வகையில் சைவசித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகளை விளக்கியருளினார்கள். வாயிலார் முனையடுவார் நாயனார் புராணங்கள் உபதேசிக்கப்பெற்றன. வாயிலார் நாயனார் புராணத்தில் கூறப்பெற்றுள்ள அகவழிபாட்டு நெறியினை விளக்கினார்கள். - அகப்பூசை, புறப்பூசை என்னும் இருவகை முறைகள் பற்றித் திருமுறைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அருளி அந்தர்யாக பூசை எனும் அகவழிபாட்டின் அருமையைக் குறிப்பிட்டார்கள்.

ஆதீன அடியார்கள், அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முதலியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 4—2—90 அன்று 103 ஆவது அருளுபதேசம் நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக.

திருப்பொன்னூசல் விழா

வேளூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தையல்நாயகி உடனுகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கு மார்கழித்திங்கள் 17 ஆம் நாள் 1—1—90 திங்கட்கிழமை முதல் பத்துநாட்கள் திருப்பொன்னூசல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் பெருமானையும் பெருமாட்டியையும் திருப்பொன்னூசலில் எழுந்தருளச் செய்து, சிறப்பாக வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. திருவெம்பாவை ஓதப் பெற்றது. 10—1—90 திருவாதிரைத் திருநாளில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் தரிசனமும் நடை பெற்றன. அன்பர்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

சீகாழியில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத. சுவாமி தேவஸ்தானத்தில் 1—1—90 திங்கள் முதல் பத்து நாட்கள் ஊஞ்சல் - திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. திருவெம்பாவை ஓதப்பெற்றது. நாள்தோறும் மாலையில் சுவாமி, அம்பாள் வலம்வருதலும் காலை, மாலை இருவேளைகளில் பிராகாரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் வலம் வருதலும் ஓதுவாமூர்த்திகள் திருவெம்பாவைஓதத் தீபாராதனை நிகழ்தலும் ஆகியவை சிறப்பாக நடைபெற்றன. 9—1—1990 செவ்வாய்க்கிழமையன்று இரவு திருவாசகத்தின்ஒருபகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதப்பெற்றது. திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவீதியுலாக்காட்சி சிறப்பாக நடைபெற்றது.

தருமை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
மார்கழி மாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மாதத்தை வழிபாட்டிற்குரிய மாதமாக நம் முன்னோர்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே முன்னோர்கள் சைவ வைணவத் திருக்கோயில்களில் வைகறைப் போதில் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டையும், சிவன்கோயில்களில் திருவாதிரைப் பெருவிழாவையும், திருமால்திருக்கோயில்களின் வைகுண்ட ஏகாதசி விழாவும் ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். மார்கழி மாதம் தேவர்களின் விடியற்காலம் என்றும் அவ்விடியற்காலை வேளையில் இறைவழிபாடு செய்து இறையருள் பெற வேண்டும் என்றும் கருதி மார்கழி மாத வழிபாட்டை நம்முன்னோர்கள் மேற் கொண்டுள்ளனர். மாதங்களுக்குள் மார்கழிமாதமாக இருக்கிறேன்

என்று பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறியிருக்கின்ருர் என்பது இம்மாதத்திற்கு மேலும் சிறப்புத் தருவதாகும். இம் மாதத்தில் இறைவழிபாட்டை மேற்கொள்வோர் இவ்வாண்டு முழுவதும் செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பது நம் முன்ளுேர்கள் முடிவு. அம்முறையில் நம்நாட்டில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு எல்லாத் திருக்கோயில்களிலும் சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது.

தருமை ஆதீனத் திருக்கோயில்களிலும் மார்கழி மாதவழிபாடு சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்தமூர்த்தி யாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும் சிறப்புற நிகழ்த்தியருளுகின்ருர்கள்.

பின்னர் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காம்பிகை திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற திருக் கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட் பிரசாதம்வழங்கி ஆசியருள்கின்ருர்கள். ஆங்காங்கும் உள்ள மக்கள் பலருக்கும் இறைவழிபாட்டு முறையை உணர்த்தவும், இவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்திப் பயன்பெறச் செய்யவும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பல தலங்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி அருளுகின்ருர்கள். மேலும் ஆதீனத் திருக்கோயில் களுக்கு எழுந்தருளும்போது ஆதீன உயர் அலுவலர்களையும் உடன் அழைத்துச்சென்று ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடச்செய்து நெறிப்படுத்தியருள்வதும் குறிப்பிடத் தக்கது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்புவழிபாட்டின்போது உலக நலம் கருதி சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அருச்சனையும் நிகழ்த்துவித்து வழிபாடாற்று கிருர்கள்.

சோழநாட்டைச் சிவாலயமாகக் கொண்டு வழிபடும் முறையில் மத்தியார்ச்சுனம் என வழங்கும் திருவிடைமருதூர்த் திருக்கோயிலை சிவத்தலமாகவும், சூழவுள்ள திருவலஞ்சுழியை விநாயகர் தல மாகவும், சுவாமிமலையைமுருகன்தலமாகவும், திருவாவடுதுறையை நந்தி தலமாகவும், திருஆலங்குடியைத் தட்சிணுமூர்த்தித் தல மாகவும், சிதம்பரத்தை நடராஜப் பெருமானுக்குரிய தலமாகவும், சீர்காழியைப் பைரவர் தலமாகவும், திருஆப்பாடியைச் சண்டே சுவரர் தலமாகவும், சூரியனர்கோயிலை நவக்கிரகத் தலமாகவும் கொண்டு விளங்கும் தலங்களையும் வழிபட்டருளினர்கள்.

வழிபாடாற்றிய தலங்கள் :

16—12—89 சனிக்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ மயூரநாதசுவாமி குமரக்கட்டளை, 17—12—89 ஞாயிற்றுக்கிழமை திருத்துருத்தி (குத்தாலம்) ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயில், 18—12—89 திங்கட்கிழமை திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில், 19—12—89 செவ்வாய்க்கிழமை வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி திருக்கோயில், 20—12—89 புதன்கிழமை விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் திருக்கோயில், 21—12—89 வியாழக் கிழமை திருமயிலாடுதுறை-வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவர சுவாமி திருக்கோயில், சித்தர்காடு ஸ்ரீ சிற்றம்பலநாடிகள், ஆலந்துறையப்பர் ஸ்ரீ சம்பந்தர் திருக்கோயில், 22—12—89 வெள்ளிக்கிழமை சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி திருக்கோயில், திருமுல்லைவாயில் திருமுல்லைவனநாதர் திருக்கோயில், 23—12—89 சனிக்கிழமை திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயில், காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி திருக்கோயில், 24—12—89 ஞாயிற்றுக்கிழமை திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரர் திருக்கோயில், சூரியனார்கோயில், திருமங்கலக்குடி ஸ்ரீ பிராணநாதர் திருக்கோயில், 25—12—89 திங்கட்கிழமை திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில், ஆலங்குடித் திருக்கோயில், 26 12-89 செவ்வாய்க்கிழமை வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி திருக்கோயில், திருப்புன்கூர்த் திருக்கோயில், 27-12-89 புதன்கிழமை திருநின்றியூர்த் திருக்கோயில், 28-12-89 வியாழக்கிழமை திருவாரூர்த்திருக்கோயில், 29—12—89 வெள்ளிக் கிழமை மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில், 30—12—89 சனிக்கிழமை பரசலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில், 31—12—89 ஞாயிற்றுக்கிழமை ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி திருக்கோயில், 1—1—90 திங்கட்கிழமை திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில், 2—1—90 செவ்வாய்க்கிழமை திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீ சுவரசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, திருவலஞ்சுழி, 3—1—90 புதன்கிழமை மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயில், 4—1—90 வியாழக்கிழமை தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில், 5—1—90 வெள்ளிக்கிழமை திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி திருக்கோயில், 6—1—90 சனிக்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி திருக்கோயில், 7—1—90 ஞாயிற்றுக் கிழமை ஸ்ரீ வேளூர் (கார்த்திகை) திருஇந்தளூர் (ஏகாதசி) திருக்கோயில்கள், 8—1—90 திங்கட்கிழமை போளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி திருக்கோயில், கழனிவாசல் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில், 9—1—90 செவ்வாய்க்கிழமை திருச்சி, ஸ்ரீ மௌனமடம் தாயுமானவர் திருக்கோயில், உய்யக்கொண்டான் திருக்கோயில், 10-1-90 புதன்கிழமை மேலக்கோயில் (ஞானபுரீசுவரர் கோயிலில்) நடராஜாவுக்கு பொன்னுடை சார்த்தி சிறப்பு வழிபாடு செய்து, தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயில் வழிபாடு செய்தருளினார்கள்.

✻ எதிர்காலம் ✻

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஹு தைமீ 1உ முதல் 30உ முடிய)
(14—1—1990 முதல் 12—2—1990 முடிய)

சுக்கிலஹு தைமீ 1உ பானுவாரம் மக நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயாதி 11 நாழிகை 41 வினாடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரிய பகவான் தனுர் ராசியிலிருந்து மகர ராசியில் சங்கிரமணமாகத் தைமாதம் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று உத்தராயணபுண்ணியகாலம், சங்கடஹர சதுர்த்தி. மகாசங்கிராந்தி பொங்கல் பண்டிகை. இந்த வருஷ தைமாத சங்கிரமணகால இலக்கினம் நக்ஷத்திரம் மற்றும் கிரக ஸ்திதியின் பலனாவது உலக பிரஜைகளுக்கு உய்வு உண்டாகும். தேசங்களில் அரசர்கள் ஜனாதிபதிகள் ஆளுநர்கள் பிரஜைகளின் மன ஒருமையில் தம்தம் செயல்பாடுகளில் ஸ்திரபான்மைக் கொண்டு இனிது முடித்து, அனைவரும் நற்பலன் அடைதல் பொருட்டுத் தத்துவ ரீதியில் லோகோபகாரங்கள் அறங்கள் நிகழ்த்த நீதி செலுத்தி வருவர். மாண்புமிக்கோரால் தேவாலயத் திருப்பணிகள் புண்ணிய க்ஷேத்திரம் யாத்திராடன வசதிகள் செம்மையில் நடந்துவரும். எல்லா மதச்சார்பினரும் தம் மதசம்பிரதாயவழியில் இளையசமுதாயத்தினரைத் தெய்வீகத்தில் நெறி வழிபடுத்துதலின்றும், தொழிற்சாலைகள் காரியாலய அலுவல்களில் விபத்துக்கள் நேருதல், மனப்பயிற்சி இன்மையில் மாந்தர் செயலில் கால தாமதம் இவை நீங்கி உழைப்பில் முன்னேற்றமும் வையமும் ஆகும். நாடுகளில் எங்கும் செங்கோல்ஆட்சியில் மனுநீதி தர்மம் நடந்துகொண்டிருக்கும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவசமயம் பரிபாலிப்பு கர்த்தாக்களாக வந்து பரமாசாரிய சுவாமிகளாகத் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள், ஜெகத்குருமகான்கள், உலகத்துக்குத் தெய்வீகத்தில் அரசர்நீதி, திருவருள் மாந்தர் அடையும் உயர்பாக்கியம் இவைபற்றித் தம் திருவாய்மலர்ந்து பொன்மொழி பகர்ந்து, விமர்சித்து அருள்வார்கள். திருச்சபையில் கூடிய சிஷ்யகோடிகள் பக்தர்கள் சிவநேய செல்வர்கள் அரசு பிரமுகர்கள் எல்லோருக்கும் மஹாபிரசாதம் வழங்கி ஆசியருள்வரர்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள்

விசேஷ பூசனைகள க்ஷேத்திர ஐதீகத்தில் உற்சவங்கள் நடந்து உலகத்தில் சுபிட்சம் மேவிடும்.

சந்திர கிரஹணம்

குறிப்பு :- சுக்கிலஹூ தைமீ 27உ (9—2—1990) சுக்கிர வாரம் அன்று பௌர்ணமி, ஆயில்யம் நக்ஷத்திரம் கேது கிரஸ்தம் தூம்ரவர்ணம் ஸோமோபராக புண்ணிய காலம். ஜந்திரபர்வா சம்பவிக்கும்.

ஸ்பர்சம்	இரவு மணி 10-59	உன்மீலனம்	இரவு மணி 1-03
நிமீலனம்	இரவு மணி 12-19	மோக்ஷகாலம்	இரவு மணி 2-24
மத்தியகாலம்	இரவு மணி 12-42	ஆத்யந்தம்	இரவு மணி 3-25
பரிமாணம்	இரவு மணி 1-08		

அன்று வெள்ளிக்கிழமை பகல் 2 மணிக்கு முன்பு போஜனம் செய்ய வேணும். பௌர்ணமி சிராத்தம் மறுநாள்செய்யவேணும். ஜன்ம நக்ஷத்திரம் ஆயில்யம், அதன் முன்பின் நக்ஷத்திரம் பூசம், மகம், அனுஜன்மம், திருஜன்ம நக்ஷத்திரமான கேட்டை, ரேவதி இவற்றில் பிறந்தவர்கள் சாந்தி செய்துகொள்ளவேணும்.

1 மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் பெருமதிப்பில் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத் துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் உயர்வளிக்கும். பல துறை அலுவல்களிலும் பிப்ரவரி 4உ ஆனால் பிரசித்தமும் நல்ல நிகழ்ச்சியையும் ஏற்படுத்தும். அரிய பெரிய காரியங்கள் புத்தி மேம்பாட்டினால் சாதனையாகும். நவீன வாகனம் வாங்குதல் ஆகும். தாம்பத்திய வாழ்வில் நல்ல சௌகரியம் இருந்து வரும். ஜனவரி 21, 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - ரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத் துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் மேன்மை ஸ்திதி ஏற்படும். நல்ல வாகனம் தரும். ஓர் விபத்து நேருதல் அல்லது பித்தாதிக்க நலிவு வந்து நீங்கும். குலதெய்வ பூசை செய்தல் நலம். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில்

உத்தியோகத்தில் பிப்ரவரி 4உயின் மேல் அரசாங்க நன்மை ஏற்பட்டு வரும். மறைமுக எதிர்ப்பு பாதிக்காது. பூமி இயந்திரங்களில் அபிவிருத்தியாகும். எல்லாக்காரியங்களும்ஜெயபிராப்தியாக நடந்து வரும். தாம்பத்திய வாழ்க்கை விருப்பு வெறுப்பன்றிச் சாதாரணமாக நடந்து வரும். புத்திரர்களுக்கு உயர்வளிக்கும். ஜனவரி 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் நான்கு வகையில் வரவாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் இம்மாதம் 4உ பகலைன் நற்பலனை உண்டு பண்ணுகின்றார். செய்தொழில் உத்தியோகம் மதிநுட்பச் செயலாற்றல்களில் ஜெய அனுகூலமும் பிரசித்த நிலைமையையும் உண்டுபண்ணும். பெயர் உள்ள தர்மம் செய்விக்கும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் அளிக்கும். ஜனவரி 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம்தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மை உண்டாக்கும். சிரமமின்றி எல்லாக் காரியங்களும் இலகுவில் நடப்பதாகும். அரசுகாரியங்களில் நற்பெயர் ஏற்படும். போற்றுதல் சம்பவங்கள் நிகழும். முன்பு விலகியிருந்த நண்பர் அல்லது உறவினர் கூடுவர். ஜனவரி 21 தேதி ஆனால் சிவந்த வஸ்துவின் பிராப்தி ஆபரண பிராப்தி அளிக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும், ஜனவரி 30, 31 பிப்ரவரி 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி· சனி சுபம்.

6 கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் மூன்று வகையில் வந்து சேரும். வித்துவத்துவம் கலைத் துறையில் வெகுமதியளிக்கும். நல்லோர் பிரபலஸ்தர்களால் அனுகூலம் ஏற்படும். சகோதரர் அல்லது அன்புக்குரியவர் ஒருவர் மனஸ்தாபத்தில்சிறிதுகாலம்விலகிக்கொள்வர். குலதெய்வத்துக்குப் பூசை போடுதல் நலம். ஓர் இயந்திர சாதன பிராப்தியையளிக்கும். எல்லாக்காரியங்களும் தெய்வபலனால் ஜெயபிராப்தியாகவே நடந்து வரும்; தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் பெருமதிப்பில் வந்து நிறையும். பொன்மணி பூஷணம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிப்ரவரி 4 தேதியின் மேல் அரசாங்க கௌரவமும் வெகுமதியும் தரும். லேவாதேவிகளில் நல்லன ஏற்படும். நவீன வாகன பிராப்தியளிக்கும். செந்நெல் பிராப்தியில் நற்பலன் வரச்செய்யும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கியபலன் அளிக்கும். எல்லா அலுவல்களிலும் பிரயோஜன சித்தியையளிக்கும். பிப்ரவரி 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

8 விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம்வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் உயர்வளிக்கும். சாஸ்திரம் வைதீகம் பேணும். பொதுநல ஈடுபாட்டில் மன உறுதியில் செயல்படுதல் ஆகும். எல்லா அரிய பெரிய காரியங்களும் தெய்வபலனில் சித்தியாகும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பூமி பிராப்தியில் பணம் முடங்கும். புத்திரர், பௌத்திரர்களின் நலனில் செலவினம் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறையில் மேலிடத்திய நன்மைகளை ஏற்படுத்தும். பிப்ரவரி 4 தேதியின் மேல் எதிர்பார்த்துள்ள அரசு கடிதம் வந்து நல்லன ஏற்படும். எல்லாக்காரியங்களையும் திறனை படுத்தித் திருத்தமாகச் செய்விக்கும். தாம்பத்தியவாழ்க்கை தெய்வ பக்தியில் தானதர்மத்துடன் நடந்துவரும். பிப்ரவரி 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் நல்லவகையில் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்பச் செலவினங்களும் செய்யும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் விளம்பரம் முதலீடு செய்தல் ஆகும். எல்லா முக்கியகாரியங்களிலும் மேலிடத்தவர் அனுபவஸ்தர்கள் அனுசரணையில் இருப்பர். புத்திரருக்கு மேன்மை ஸ்திதி உண்டுபண்ணும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜனவரி 14, 15, பிப்ரவரி 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் பெருமதிப்பில் வந்து சேரும். வீடு மனையில் முதலீடு செய்யும். மனைவி வழியினர் சௌகரியம் அரசுகண்யம் இவ்வகையில் வைராக்கிய பேச்சில் செலவினங்களும் ஏற்படும். எல்லாக்காரியங் களையும் கெடியாக நடத்த அனுகூல வாய்ப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜனவரி 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நான்கு வகையில் வருவதாகும். வித்துவத்துவம் கலைத் துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் பிப்ரவரி 4 தேதியில் நல்ல வாய்ப்புக்கள் ஏற்படும். அரசு லிகிதம் வருதல், பதவி உயர் வாகுதல் ஆகும். பூமியில் இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் தரும். எல்லாக் காரியங்களும் அந்தஸ்து உயர்வு தோரணையில் கெடியாக நடந்துகொண்டிருக்கும். ஜனவரி 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

பார்வையாளர் குறிப்பு (நகல்)

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானம்

வைத்தீசுவரன்கோயில்

வைத்தீஸ்வரனை - முத்துக்குமரனை சேவிக்கின்ற வாய்ப்பு ஜானகிராமன் — இராமதிலகம் அறுபதாம் ஆண்டு மணிவிழா நிகழ்ச்சி காரணமாக இன்று கிடைத்தது. எனது நண்பர் திரு. E. S. நடராசன் இவ்வாலயத்தை நிர்வகிக்கும் பாங்கை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். சுத்தம் தெய்வ அருளை உணர்த்தும். சுற்றுப்புறச்சூழல் இவ்வாலயத்தை அழகுறவைத் துள்ள பான்மை மங்களகரத்தை உணர்த்திநிற்கின்றது. உடல் நலம் உள்ளநலத்தை வளர்க்கும். வைத்தியர்கள் தலைவனாக வீற்றி ருக்கும் வைத்தீஸ்வரனை நாடினால் பக்தர்களுக்கு நலம் பேணிப் பேரின்ப அருளைப் பொழிவான் என்பது உறுதி. ஆலயத்தைச் சிறப்புறக் கண்காணித்துவரும் நிர்வாகிகளை நான்மனதாரப் பாராட்டுகின்றேன்.

(ஒ-ம்) பு. ரா. கோகுலகிருஷ்ணன்,
4—10—89. Chief Justice, Gujarat State,

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V

பாடம்-11.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் :

ஸ்ரீ சொக்கநாதசுவாமி திருவருட்பா

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்.,
தருமபுரம்.

அருள் வழங்கும் சொக்கநாதர் :

தருமை ஆதினக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறையருள் கைவரப்பெற்று மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி "இட்டு எடுப்பார்போல்" பெட்டகம் பெற்றெடுத்தார். பெட்டகத்தினுள்ளே ஸ்ரீ சொக்கநாதர் இலிங்க வடிவாக எழுந்தருளியிருந்தார். பூஜாமூர்த்தியாக எழுந்தருளிய ஆலவாய்ச் சொக்கநாதரைப் பதினொரு கலித்துறைப் பாக்கள் பாடிப் பரவினார். அந்நூல் சொக்கநாதக் கலித்துறை என வழங்கப் பெறுகிறது. சொக்கநாதர் அருளால் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் என்னும் ஞானகுரு வாய்க்கப் பெற்றார். பின்னர் குருநாதர் கட்டளைப்படி தருமபுரம் அடைந்து ஆதீனம் நிறுவியும் ஓடிவரும் காரணர்க்கு உண்மை அருளியும் ஸ்ரீசொக்கநாதரை முறைப்படிப் பூசித்தும் சைவநெறி பரப்பி வந்தார். தருமையில் இவர்கள் ஆதீனம் நிறுவி அருளாட்சி தொடங்கிய காலம் கி. பி. 1560ஆகும் என்பர் ஆய்வாளர். அக்காலம் முதல் பூசைமடத்தில் வழி வழியாகத் தருமை ஆதினக் குருமூர்த்திகளின் ஆன்மார்த்த மூர்த்தியாக எழுந்தருளிப் பூசை கொண்டருள்கின்றார் ஸ்ரீ சொக்கநாதர். ஸ்ரீ சொக்கநாதர் திருவருளால் ஆசிவழங்கும் மரபு வழிவழியாக நிகழ்ந்து வருகின்றது.

நூல்கள் :

ஸ்ரீசொக்கநாதர் தோத்திர நூல்களாகக் குருஞானசம்பந்தர் அருளிய ஸ்ரீ சொக்கநாதக்கலித்துறை, சொக்கநாத வெண்பா என்பனவும் தருமை ஆதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் அருளிய ஸ்ரீ. சொக்கநாதசுவாமி திருவருட்பா என்னும் இக் கட்டுரையின் எழுதுபொருளாகிய நூலும், திருசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கர் மயிலாடுதுறை முத்துச்சாமிப்பிள்ளை எழுதிய தருமைசொக்கநாத மாலை என்ற நூலும் அமைந்துள்ளன. இதுபோது அறியவருவன இவையே.

பத்தாவது குருமூர்த்திகளின் திருப்பணி :

தருமை ஆதீன ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீசொக்கநாதர் பூசைமடம் பத்தாவது குருமூர்த்திகள் அருளாட்சிக் காலத்தில் கருங்கல் திருப்பணியாகச் செய்யப்பெற்றது. இதனைப் புலப் படுத்தும் கல்வெட்டு ஒன்று பூசை மடத்தின் வலப்புறத்தில் படி எடுத்து வைக்கப் பெற்றுள்ளது. அதிற்காணப்படும் வாசகம் வருமாறு :—

> கலியுக வருஷம் 1842 இல், சகாப்தம் 1663 க்கு மேற் செல்லா நின்ற ரௌத்திரி வருஷம் சித்திரைமீ 3உ ஒன்பதாங் குருமூர்த்தமாக அவதரித்த திருநாவுக்கரசு தேசிகனருள் பெற்ற சிவஞான தேசிக சம்பந்தனருட் செங்கோல் செலுத்து நாளையில் சொக்கநாதசுவாமி பூசைமடமும் தம்பிரான்கள் பூசைமடமும் தொட்டிக் கட்டும் சித்திரக்கட்டும் கருங்கல் திருப்பணியாகக் கட்டி நிறைவேறின.

மேற்காணும் கல்வெட்டுப் பகுதி குருமூர்த்திகள் ஆன்மார்த்த மூர்த்தி சொக்கநாதர் பூசைமடத்தைக் கருங்கல் திருப்பணிசெய்த மையை விளக்கமுறக் கூறும் சான்றாகும்.

பூசை மடத்தினைக் கருங்கற் திருப்பணியாகச் செய்ததோடு அமையாமல் பூசை கொண்டருளும் ஸ்ரீ சொக்கநாதர் மீதுதிரு அருட்பாப்பாடித் தோத்திரம் செய்து போற்றியருளிய இக் குருமணிகள் பற்பல அற்புதச் செயல்களை இறையருளால் செய்த வர்கள். இனி அவர்கள் அருளியநூற்சிறப்பை ஒருவாறு காண்போம்.

அருட்பாப் பாடல் அமைப்பும் அடைவும் :

ஸ்ரீ சொக்கநாதர் திருவருட்பாப் பாடல்கள் பத்து. விநாயகர் துதி ஒன்று - ஆகப் பதினொரு பாடல்களால் ஆயது. அருட்பாப் பாடல்கள் பதினொன்று சீர்கழிநெடில் விருத்தத்தால் ஆகியன. விநாயகர் துதி கட்டளைக் கலித்துறை.

> " சிகரிசேர் தருமை வளர்சொக்க நாதச்
> செல்வமே சிற்சுகோ தயமே "

என 1, 2, 3, 4, 5 ஆகிய பாடல்களின் அடைவு அமைந்துள்ளது.

> " சிறந்திடுத் தருமை வளர்சொக்க நாதச்
> செல்வமே சிற்சுகோ தயமே "

என 6, 7, 8, 9, 10 ஆகிய பாடல்களின் நிறைவு அமைந்துள்ளது. பாடல்களின் முன்னிரண்டடிகள் ஸ்ரீ குருமூர்த்திகளின் வேண்டுகோளாகவும் பின்னிரண்டடிகள் இறைவனின் திருவருட் பெருமை கூறும் விளி மற்றும் தருமைச் சிறப்பாகவும் பெரும்பான்மையும் விளங்குகின்றது.

விநாயகர் துதியில் :

தருமை ஸ்ரீ சொக்கநாதருக்கு ஆண்டாண்டு தோறும் வழி வழியாக நிகழும் விழாக்களுள் ஆவணி மூலப்பெருவிழாவும் ஒன்று. மதுரைப் பெருமான் செய்தருளிய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கு. திருவிளையாடல்களுள் பிட்டுக்கு மண் சுமந்தது எளியவர்க்கு ஆட்கொள்ளும் இறைவன் கருணையை விளக்குவது. இறைவன் வந்தியின் பிட்டுக்கு உகந்தான் என்பதை நினைப்பிக்கும் முகத்தான், ஸ்ரீ சொக்கநாதருக்குப் பிட்டு நைவேத்தியம் வைக்கப் பெறும். விநாயகர் துதிப்பாடலில் ஸ்ரீ சொக்கநாதர் பெருமானின் சிறப்பாக,

> " அவ்வந்தி ஈந்திடும் பிட்டினுக்கு ஆட்பட்ட ஆண்டகைதற்
> செவ்வந்தி மேனியன் சொக்கலிங்கேசன் "

என ஸ்ரீலஸ்ரீ குருமூர்த்திகள் குறிப்பிட்டருளிச் செய்துள்ளார்கள். "அரும்பிட்டுப் பிட்டுண்டு ஆட்செய்யும் அன்னையவள் தரும் பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே" எனக் குமரகுருபரரும் பெருமான் திருவருளை முன்னமே மொழிந்து போற்றியருளினார்கள்.

திருமாலும், பிரமனும் போற்றும் சீர்மிக்க சொக்கலிங்கேசனைப் பாடுதற்கு - வந்திக்கு ஆட்பட்ட ஆண்டகையைப் பாடுதற்கு - தருமைப்பதி விநாயகர் அடியேனைச் செலுத்துவார் என விநாயகர் துதிப்பாடற் கருத்து அமைந்துள்ளது.

கேசாதி பாதம் - தியானத்திருவுரு !

அருவுருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ சொக்கநாதப்பெருமானை உருவத் திருமேனியாகத் தியானம் செய்வதற்கு உதவும் அருள்நோக்கோடு ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் பாடிய பாடல் தியானம், பாராயணம் ஆகியவற்றுக்குப் பெரிதும் உகந்தது.

நெருப்பைத் திரித்தது போன்ற சடைமுடி; சந்திரன், சூரியன், அக்னி என்ற இவர்கள் கண்களாக அமைந்துள்ளனர். திருமால், பிரமன் முதலிய தேவர்களின் தேவியர் மங்கல நாண் காக்கும் பொருட்டுக் கறுத்த கண்டம். மழுவும், மானும் நீங்காத கரங்கள்; அபய வரதத்திருக்கைகள்; மீனை ஒத்த கண்ணுமை கொண்ட இடப்புறம், பாம்புக் கச்சை அணிந்த இடை; தாமரைகளாம் திருவடி. இப்படிப்பட்ட திருவுருவைத் தரிசிப்பது எந்நாளோ? - என்னும் கருத்தமைந்தது அப்பாடல்; பாடல் வருமாறு :—

" எரிதிரித் தனைய புரிசடைச் சடிலம்
இலங்கிய மணிமுடி எழிலும்
இந்துவும் பகலும் செந்தழல் கொழுந்தும்
இயைந்தநல் நேத்திர வனப்பும்
கரியவன் அயனூர் மனைபர்மங் நலநாண்
காத்திடக் கறுத்தகந் தரமும்
கதிர்விடு மழுவும் மறியும் நீங்காத
கரமும்மற் றிருதிருக் கரமும்
மருமலர் வாவி மீனலோ சனியும்
மகிழ்ந்து மேவிய இடப்பாலும்
மாசுணக் கச்சை வயங்கிய அரையும்
வண்மைசேர் பாததா மரையும்
திரிதரும் கொடிய மனமுடைச் சிறியேன்
தெரிசிப்ப தெந்நாள் எந்தாய் !
சிறந்திடும் தருமை வளர்சொக்க நாதச்
செல்வமே சிற்கனோ தயமே " (பாடல் - 7.)

அருள் பெறும் தகுதி :

திரிகரண சுத்தியோடு இறைவனைத் தொழும் நெறியே அவனருள் பெறும் வழி. மண், பெண், பொன் ஆசைதுறந்து வாழும் வாழ்க்கை அவனை அடையும் நெறி. கொடுமனம் நீத்து வாழ்தலே இறையருள் கைகூட்டும் பாதை - இவ்வாறெல்லாம் ஆன்மகோடிகள் உய்ய வழிகாட்டுகின்றது ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமி திருவருட்பா.

"சுந்தர மேனிச் சுந்தர நினது
கழலிணையினை அன்பொடு பணியேன்"

என மெய்ச் செய்கையையும்

"கருதிய எல்லாம் அளிக்கும் நின்நாமம்
களிவொடும் உரைத்திடக் கருதேன்"

என வாக்கின் செய்கையையும்

"எந்தையே முக்கண் இறைவனே எனநின்று
ஏத்துவார் இனத்தையும் நாடேன்"

எனமனத்தின் செய்கையினையும் முனிந்து கூறியருளினர் ஆசாரியர், மேலும் மூவாசை பற்றிக் குறிப்பிட்டு

"முத்திறத்து ஆய விச்சையிற் சுழன்று
மூடனேன் கேடுறக் கருணை
மூர்த்திநீ எனைக் கைவிடின் யாரே
முடிப்பர் என்குறைகளை ?

என வினவிப் போற்றுகின்றார்.

குற்றமற்ற அறிவைக் கொடுத்தாய் நீ! அம்மனமோ வழுவிச் சென்றது. கொடுமனம் ஆயிற்று. கொடுமனம் உலக ஆசையில் அழுந்திநிற்கிறது. இறை உண்மையை அறியாது - துதியாது - வழிபடாது துன்பத்திற்கு ஆளாகிறது (பாடல் - 9) என வருந்திபுரைக்கின்றார்கள். இங்ஙனம் பாடல்தொறும் நன்னெறிச் செல்லும் சன்மார்க்கம் காட்டி ஆன்மாக்களை உய்யக்கொண் டருளியுள்ளார்கள்.

துயரம் போக்கும் தூயோன் :

இறைவன் உலகத்து உயிர்களை ஈடேற்றம் செய்யும் பொருட்டே தனு கரண புவன போகங்களை அருளியுள்ளான். ஆனால் ஆன்மாக்களோ இறையருளை மறந்து உலக இன்பங்களைத் துய்க்க விரும்புகின்றன. அகப்பற்றும் புறப்பற்றும் கொண்டலைகின்றன. குருமூர்த்திகள் இந்நிலைகண்டு மனம் நொந்து, 'துயரம் போக்கும் தூயோனை வழிபட்டு உய்க' என அருளிச்செய்கின்றூர்கள்.

" அனுதினம் நின்றன் அருள்வழி இருக்க
அலைவுறும் கரணம் நிற்கலையே
அன்பொடு பூசை புரிய ஐம்பொறிகள்
அடங்கிஓர் நெறியின் நிற்கலையே
எனதுயான் என்னும் பற்றுகள் ஒழியும்
ஏதுவோ யாதும் இங்கு இலையே
எந்தநாள் எளியேன் சிந்தையின் துயரம்
இரிந்திடப் பரிந்தருள் புரிவாய் "

எனத் துயரம் போக்கும் தூயோனை வழிபட நெறிகாட்டியுள்ளார்கள்.

வரம் அருள்க !

நினைப்பது இறைவன் திருவடிகளையே! ஓதவேண்டுவது இறைவன் பொருள்சேர்புகழையே! அணியவேண்டுவது திருநீறும் உருத்திராக்கமுமே ! நட்புக்கொள்ளவேண்டுவது மாசறு மனம் படைத்த அடியார் திருக்கூட்டத்தினுடனேயே ! - வஞ்சநெஞ்சர் தமை விட்டு நீங்குதலே நன்னெறிகூட்டும் - இங்ஙனம் கருதிய ஸ்ரீலஸ்ரீ சிவஞானக் குருமூர்த்திகள்,

" உன்னுற வேண்டில் உன்னடி உன்ன;
ஓதிட வேண்டில் உன்புகழை
ஓதிட; அணிய வேண்டில் நல் நீறுடு
உலவு கண்டிகையுமே அணிய;
மன்னிய நட்புக் கொள்ள வேண்டிடில் உன்
மாசறும் அடியர்பால் கொள்ள;
வஞ்சநெஞ்சர் தம்மைவிட் டகல
வரம் எனக்கு அளிக்கும் நாள் எந்நாள்?

எனத் திருவரம் வேண்டி அருளிச்செய்தபாடல், செய்யத்தகுவன இவை; கொள்ளத்தகுவன இவை எனக் குறித்துக்காட்டித் தள்ளத்தகுவது இது என்பதையும் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

மும்மூன்றய் நீத்து மூன்றால் உனைச் சார்வேன் :

இராஜசம், தாமதம், சாத்விகம் என்பன முக்குணங்கள்; ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்கள், மண், பெண், பொன் என்பன முத்திற விருப்பங்கள். — இவற்றை நீக்கி உடல், பொருள், ஆவி என்ற மூன்றாலும், முக்கண்ணனே! முப்புரம் எரித்தவனே! என்னை உனக்கு அடைக்கலமாகத் தந்தேன்;—எனக் குறித்தருளும் இறுதிப் பாடல் சொல்நயமும் பொருள்நயமும் பொருந்தியது.

" முக்குணம் அகற்றி மும்மலம் அகற்றி
மூவகை அவத்தையும் அகற்றி
முத்திற விருப்பும் அகற்றிநின் அடியை
முன்னி நின்று உடல் பொருள் ஆவி
தக்கவன் நினக்கே அடைக்கலம் என்னத்
தந்துநின் நிருமல சுகத்தில்
சார்ந்தினி திருக்க எளியனேற்கு அருளும்
தன்மை நின் தகைமையது! "

என்னும் தொடர்களால் " இவைகளை அகற்றுக; இந்நெறிச் சேர்க; இது கிடைக்கும். இதை அருள்பவன் இவன் " – என்று குறித்தருளியுள்ளமை நல் வாழ்வுக்கு வழிகாட்டுவதாக அமைந்து உள்ளது.

கரந்துலங்கு மணி :

தருமை ஆதின முதல் குருமூர்த்திகளுக்கு இறையருள் தந்த லிங்கம் சொக்கலிங்கம். ஸ்ரீ குருஞானசம்பந்தர்

" கண்ணுக்கு இனிய பொருளாகியே எனகரத்தில் வந்தாய்!
விண்ணும் பரவிடும் அற்புதமே! என்ன விஞ்சை இதான்"

என வியந்து போற்றிய பெருமான் - கரத்தில் வந்த நாயகன் மதுரைச் சொக்கேசன். இவ்வற்புத நிகழ்ச்சியைத் திருவுளத்துக் கொண்ட பத்தாம் குருமூர்த்திகள்

" சம்பந்தர் கரத்தில் துலங்கிடும் உருவே " (பாடல்-4)

என்றும்,

" சம்பந்தர் கரத்தில் துலங்கிடும் மணியே " (பாடல்-9)

என்றும் குறித்தருளிப் போற்றி செய்துள்ளார்கள்.

இறைவன் பெருமைகள் :

பாடல்தோறும் இறையருள் தகித்துப் போற்றியுள்ள குருமூர்த்திகள், தயாநிதி, ஆனந்த வாரிதி, நிறை அகவடிவு, ஆகம மறைமுடிவு, நாதமும் கடந்த போத சாகரம், நாலும் ஐந்தாகிய உரு (நவந்தருபேதம்) சனனவாரிதிக்கு ஒருபுணை, சற்குணமலை, தாசரிகள் மனமலர் மரு, கண்ணுதற் கடவுள், சிற்பரம் பொருள், நித்தியன், நிமலன், நிட்களன், அகண்டன், நிர்குணன், நிரஞ்சனன், சத்தியசொரூபன், சச்சிதானந்த தன்மையன், சுகபரஒளி, சூக்குமமாகியவெளி, சிற்பரன், சுயம்புவாயிலங்கியகோ, சிற்சுகோதயன், முக்கணன், எண்டோளத்தன், புண்ணியன் - என இங்ஙனம் பலபடத் திருநாமம் செப்பியுள்ளார்கள். இவை அனைத்தும் இறைவனின் தடத்த, சொரூப இலக்கணங்களை விளக்குவனவாய் அமைந்தவையும் உருவகக் குறியீடுகளாய் அமைந்தனவும் ஆகிய திருநாமங்களாம்.

நிறைவுரை :

பத்தாவது ஸ்ரீலஸ்ரீ குருமூர்த்திகள் சொக்கநாதருக்குக் கருங்கல் திருப்பணி செய்வித்தும், பாமாலை சூட்டியும் வழிபட்டதோடு நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்ளும் பெருமானை மனத்தகத்தானாகவும், ஆக்கிக் கொண்டவர்கள். "இதனை என் மனக்கோயில் சிறந்திடும் தருமை வளர் சொக்கநாதச் செல்வமே" (பாடல்10) என அருளியமையால் அறியலாம். சொக்கநாதப் பெருமான் மதுரைப் பெருமான், அவர் மீனாட்சி சுந்தரேசுவரர் மீனாட்சியம்மையோடு எங்கும் என்றும் திகழ்பவர்; இதனை "மருமலர் வாவி மீனலோசனியும் மகிழ்ந்து மேவு இடப்பாலும்" (பாடல் 6) என்றும் "தையல் ஓர் கூறு கொண்ட சுந்தரமே" (பாடல் 9) என்றும் அருளிச் செய்துள்ளமையால் உணரலாம். அம்மையப்பர் சொக்கேசராய் எழுந்தருளித் தருமை ஆதீனத்தில் குருமூர்த்திகளின் ஆன்மார்த்த மூர்த்தியாகத் திகழ்ந்தருளிப் பூசை கொள்கின்றார். தருமை ஆதீனப் பூசைமடத்தில் வழி வழியாகக் குருமூர்த்திகளால் செய்யப் பெறும் பூசை வழிபாட்டில் கலந்துகொண்டு தரிசித்தும், சொக்கநாதர் அருள்நலம் போற்றும் நூல்களைப் பாராயணம் செய்தும் திருவருளும் குருவருளும் பெற்று உய்ய இறையருள் துணை கூட்டுவதாக.

14—1—90 ஞாயிறு, தனுர்மாஸ பூஜை பூர்த்தி. உத்தராயணபுண்யகாலம். திருவையாறு மாதப்பிறப்பு. திருக்கடவூர், திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டானேசுவர சுவாமிக்கு அபிஷேகம். சீகாழியில் ஸ்ரீ உமாமகேசுவரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு. குத்தாலத்தில் ஸ்ரீ சந்திரசேகரர் காவிரியில் தீர்த்தம்கொடுத்தருளல். மகரசங்கராந்தி, பொங்கல்பண்டிகை, சங்கடஹர சதுர்த்தி. மகரரவி 11 41. கரிநாள்.

15—1—90 திங்கள், கனுப்பொங்கல், மாட்டுப்பொங்கல், பாரிவேட்டை. திருவையாறு தியாகபிரும்ம ஆராதனை.

16—1—90 செவ்வாய், கன்னிப்பொங்கல், வேளூரில் உண்டியல் குடம் வைத்தல், இரவு ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் ஸ்ரீ சண்முகருக்கும் சண்முகார்ச்சனை. இது பிரதிவாரங்களில் நடைபெறும்.

19—1—90 வெள்ளி, வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி தைமாத கடைச்செவ்வாய் உற்சவம் ஆரம்பம். காளாஷ்டமி. தருமை ஸ்ரீ சச்சிதானந்த விநாயகருக்கு சம்வத்ஸராபிஷேகம்.

20—1—90 சனி, ஸ்ரீ தாயுமானவர் குருபூஜை. திருநீலகண்ட நாயனார் குருபூஜை.

22—1—90 திங்கள், சர்வ ஏகாதசி. திருவிளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம்.

26—1—90 வெள்ளி, சர்வ அமாவாசை, வேளூர் ஸ்ரீ கற்பக விநாயகர் தைமாத சுக்கிரவார உற்சவ பூர்த்தி. குடியரசுதினம்.

28—1—90 ஞாயிறு, வேளூர், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு தைப்

29—1—90 திங்கள், அப்பூதியடிகள் குருபூஜை. [பூச உற்சவ ஆரம்பம்.

30—1—90 செவ்வாய், சதுர்த்தி விரதம்.

31—1—90 புதன், வசந்த பஞ்சமி. குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வர சுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம்.

1—2—90 வியாழன், சஷ்டி விரதம். கலிக்கம்ப நாயனார் குருபூஜை.

2—2—90 வெள்ளி, ரதசப்தமி. திருவையாறு தீர்த்தம்.

3—2—90 சனி, கிருத்திகை விரதம். வேளூர்க் கிருத்திகை. தருமை ஸ்ரீ ஷண்முகருக்கு அபிஷேகம். பீஷ்மாஷ்டமி.

5—2—90 திங்கள், கண்ணப்ப நாயனார் குருபூஜை

6—2—90 செவ்வாய், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குத் தைமாத கடைச்செவ்வாய் உற்சவ தீர்த்தம். திருக்கடவூர் முனீசுவர பூஜை. அரிவாட்டாய நாயனார் குருபூஜை.

7—2—90 புதன், பிரதோஷம். தருமை ஸ்ரீ வனதுர்க்கை சம்வத்சர அபிஷேகம்.

8—2—90 வியாழன். தைப்பூசம். வடலூர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் ஜோதி தரிசனம். வேளூர் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.

9—2—90 வெள்ளி, பௌர்ணமி விரத பூஜையில் தேன் அபிஷேகம். ஆஸ்ரமாவை. சந்திர கிரகணம். ஆயில்யவிழா.

12—2—90 திங்கள், விஷ்ணுபதி. திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். கும்பரவி 38-57. சண்டேசநாயனார் குருபூஜை. திலகவதியார் குருபூஜை.

GNANASAMBANDAM Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடு

மெய்கண்ட சாத்திரம்

(சைவ சித்தாந்தம்)

அளவு : டபுள் கிரவுன் 1×16. பக்கங்கள் : 618.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் திருத்தமான பாடங்களோடு மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றது. டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி., எழுதியுள்ளதும், விரிவாக 47 பக்கம் கொண்டதுமான ஆராய்ச்சி முன்னுரையுடன் கூடியது. 14 சாத்திர நூல்களுடன் துகளறு போதம் என்னும் சாத்திர நூலும் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

சிவஞானபோதச் சுருக்க விளக்க அட்டவணை, சிவஞான போதக் கருத்து விளக்கச் செய்யுள்கள், சிவஞானபோத சூசிபத்திரம், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்தில்நாத அய்யர் செய்த சிவஞான போத வசனாலங்காரதீபம் ஸ்ரீ பாஷ்யக் குறிப்பு, தருமை ஆதீன முனிபுங்கவர் ஸ்ரீமத் அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் செய்தருளிய சிவப்பிரகாசக் கருத்து, உமாபதி தேவநாயனாரது அருட்கு ஒப்பின்மையும், நூற்பெருமையும், சிவஞானபோதார்த்த தோத்திரப் பாமாலை, செய்யுள் முதற்குறிப்பு அகராதி முதலியவற்றுடன் திருத்தமான பதிப்பாக 18–5–87 இல் குருஞான சம்பந்தரின் குருபூசை மலராக மலர்ந்து அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் வாரணாசியில் நடைபெற்ற மூன்றாவது கருத்தரங்கில் ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடாக வெளியிடப் பெற்றுள்ளது.

மேப்லித்தோ தாள்

காலிகோ பைண்ட் அடக்க விலை	ரூ.	25–00
பதிவஞ்சல்	ரூ.	7–10

10. 9. வெள்ளை சாதா தாள்

சாதா ராப்பர் பைண்ட் அடக்க விலை	ரூ.	20–00
பதிவஞ்சல்	ரூ.	6–50

கிடைக்குமிடம் :— செயலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமபுரம், மயிலாடுதுறை 609 001,
தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-1-90